அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
சுபீட்சம்
SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே








செவ்வாய்க்கிழமை 19.07.2022 supeedsam.com supeedsam@gmail.com


# ஜனாதிபதி தேர்வுக்கான வேட்புமனுத்தாக்கல் இன்று

## களமிறங்கப் போவது யார்?



ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வேட்புமனுத்தாக்கலுக்காக நாடாளுமன்றம் இன்றையதினம் கூடவுள்ளது.


ஜனாதிபதி தெரிவிற்கான சட்டத்தின்படி வெற்றிடம் ஏற்பட்டுள்ளதாக நாடாளுமன்றத்திற்கு அறியப்படுத்திய தினத்திலிருந்து ஜனாதிபதியை நியமிக்கும் வரையில் எந்தவொரு விடயதானங்களையும் நாடாளுமன்ற ஒழுங்குப்புத்தகத்தில் உள்ளடக்க முடியாது.

இதன்படி நாளை மற்றும் நாளை ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன.

இன்று நாடாளுமன்றம் கூடியதன் பின்னர், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரகளின் வேட்புமனுக்களைக் கையளிக்குமாறு நடாளுமன்ற

02 ஆம் பக்கத்தில்...

## ரணிலின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி தொடர்பான தீர்ப்பு இன்று



பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்வதற்கு உத்தரவிடுமாறு கோரி சட்டத்தரணி நாகானந்த கொடித்துவக்கு தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதா? இல்லையா? என்ற தீர்ப்பு இன்று (19) வழங்கப்படும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மனுவின் அடிப்படை உண்மைகளை பரிசீலித்த மேல் நீதிமன்ற நீதிபதிகள் காமினி அமரசேகர, ஷிரான் குணரத்ன மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழு இந்த உத்தரவை பிறப்பித்தது.

## வாக்களிக்க வரும் எம்.பி.க்களுக்கு பாதுக ாப்புக்கு

ஜனாதிபதி பதவிக்கு நான்கு முனைப்போட்டி நிலவும் சூழலில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அரசியல் கட்சிகளுக்கு இடையேயான கூட்டங்கள், பேச்சுக்கள் தீவிரமாக இடம்பெற்றன என்று அறியக் கிடைக்கின்றது.

ஜனாதிபதி தெரிவுக்கான பிரசாரங்களில் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களும் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளமையை சமூக ஊடகங்கள் பிரதிபலிக்கின்றன. தாம் விரும்பிய - சார்ந்த வேட்பாளர்

02 ஆம் பக்கத்தில்...

## பங்காளிகளிடம் சஜித் விடுத்த கோரிக்கை



எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச ஒன்பது பங்காளிக் கட்சிகளின் தலைவர்களை இன்று பிற்பகல் சந்தித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார, புத்திக பத்திரன உட்பட பல பாராளுமன்ற உறுப்பினர்கள்

02 ஆம் பக்கத்தில்...

## தமிழ், முஸ்லிம் எம்.பி.க்களின் ஆதரவு: ரணில் போடும் திட்டம்

புதிய ஜனாதிபதியை தெரிவு எதிர் வரும் 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இடம்பெறவுள்ள நிலையில் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் பத்து உறுப்பினர்களின் ஆதரவைப் பெறுவதற்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் குறித்த நாடாஉறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் பொறுப்பு அமைச்சர்களான ஹறின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிர்க்கட்சிகள் மற்றும் சுயாதீனமாகச் செயற்படும் உறுப்பினர்கள் மற்றும் தமிழ், முஸ்லிம் எம்.பி.க்கள் ஆகியோரின் ஆதரவைப் பெறுவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த பேச்சுவார்த்தையை பதில் ஜனாதிபதியை ரணில் விக்கிரமசிங்கவே நேரடியாக நடத்துவார் எனவும் அரசியல் வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

## குறுந்தூர் மலையில் விகாரை கட்டுவதற்கு சாணக்கியனும் சுமந்திரனும் பாரிய தடை



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ சுமந்திரன் மற்றும் இரா. சாணக்கியன் ஆகியோர் குறுந்தூர் மலையில் விகாரை கட்டுவதற்கு பாரிய தடையாக இருப்பதாக தேரர் ஒருவர் விசனம் தெரிவிக்கும் காணொளி இணையத்தில் பகிரப்பட்டு வருகின்றது.

02 ஆம் பக்கத்தில்...

## கோட்டா எதிராக மலேசியத் தமிழர்கள்




சிங்கப்பூரில் தற்போது நிலைகொண்டுள்ள இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியும் தமிழனப்படுகொலையாளியுமான கோட்டாபாய ராஜபக்சவுக்கு எதிராக மலேசியத் தமிழர்கள் அணிதிரண்டு குரல் எழுப்பியுள்ளனர்.

தலைநகர் கோலாலபம்பூரில் உள்ள சிங்கப்பூர் தூதரகத்தின் முன் பினாங்கு மாநில் துணை முதல்வரும்,

02 ஆம் பக்கத்தில்...

## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் பிரித்தானியாவின் ஆதரவுடன் விசாரணை

பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டு மக்களுக்கு விசேட உரையொன்றை நிகழ்த்தியுள்ளார்.

இதில், மே 13ஆம் திகதி தாம் பிரதமராகப் பதவியேற்ற போது, நாளொன்றுக்கு 5 மணித்தியாலங்கள் மின்வெட்டு ஏற்பட்டு, பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருந்தது. அதன் பின்னர் இரண்டு மாதங்களில் மின்துண்டிப்பு 3 மணித்தியாலமாக குறைக்கப்பட்டு விவசாயிகளுக்கு உரம் வழங்கப்பட்டு நாட்டில் எரிவாயு தட்டுப்பாடும் தீர்க்கப்பட்டுள்ளது.

ஜுலை மாதம் எரிபொருள் விநியோகத்திற்கு கடினமான காலமாக இருக்கும் என நான் முன்னதாக தெரிவித்த

02 ஆம் பக்கத்தில்...


"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஒய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH

Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt

CEO

Eidgenössische Finanzmarktaufsicht Nr.35302



Fachmann für versicherung & vorsorge

Hauptstrasse 54
6015 Luzern
Switzerland

079 8000 100

arulnages@yahoo.com

finma :34598 25605: cicero

MATHE BILDUNGSZENTRUM

கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை

பள்ளித் தலைமைகளைத்தும் பேறெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

S.MAHENDIRAN

076 431 83 79

mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல

Deutsch, Franzósisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe

அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்

Oerlikon, Uster, Schaffhausen

# இளையோரின் இன்னிசை மழையில் நனைந்த சிட்னி அன்பாலய 'இளம் தென்றல்' நிகழ்வு!








(ஐங்கரன் விக்கினேஸ்வரா)

சிட்னி அன்பாலய தொண்டு நிறுவனத்தின் இளம் தென்றல் நிகழ்வு கடந்த சனிக்கிழமை ஜீலை 9இல் இரு நிகழ்ச்சியாக மதியம் 2 மணிக்கும் மாலை 6.30 மணிக்கும் Bankstown Bryan Brown அரங்கில் சிறப்பாக நடைப் பெற்றது.

அன்பாலயம் தொண்டு நிறுவனம் தாயகத்தில் வடக்கு, கிழக்கில் போர், வறுமை மற்றும் இயற்கை பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் குடும்பங்களுக்கு ஆதரவளிக்கும் ஆஸ்திரேலியாவில் பதிவு செய்யப்பட்ட தொண்டு நிறுவனமாகும்.

இந்த இளம் தென்றல் நிகழ்ச்சியினால் திரட்டப்படும் அனைத்து நிதியும் ஈழத்தில் பல வழிகளில் அல்லல் உறும் எமது சமூகத்தினருக்கு பயன்படுத்தப்படுகிறது. நன்கொடையாளர்கள் மற்றும் தன்னார்வலர்களால் மட்டுமே நடத்தப்படும் அன்பாலயம் பல செயல்பாடுகளைக ஈழத்தில் நடாத்திவருகிறது.

அவற்றுள் குழந்தைகளுக்கு முழுமையான வாழ்வாதார ஆதரவு மற்றும் கல்வி உதவி' புரிதல், இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதும் தன்னிறைவை மீட்டெடுப்பதும் அன்பாலயத்தின் பிரதான நோக்கமாகும்.

அன்பாலயம் அமைப்பானது தாயகத்தில் வடக்கு மற்றும் கிழக்கில் உள்நாட்டுப் போர், வறுமை மற்றும் இயற்கைப் பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் குடும்பங்களுக்கு உதவுவதற்காக 2008 ஆம் ஆண்டில் தன்னார்வலர்கள் நிறுவப்பட்டது. அன்பாலயத்தின் முக்கிய குறிக்கோள் குழந்தைகளின் கல்விக்கு நிதியுதவி மூலம் பங்களிப்பதாகும். அத்துடன் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களின் கல்விச் செலவுகளுக்கு நிதி பயன்படுத்தப்படுகிறது.

சமீப காலமாக, தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளை வழங்குவதோடு, தாய்மார்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்குத் தேவையான வாழ்வாதார ஆதரவையும் அன்பாலயம் செயல்படுத்தி வருகிறது, இதனால் அவர்கள் சிறிய வருமானம் ஈட்டவும் அவர்களின் குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளைக் கவனிக்கவும் அன்பாலயம் உதவுகிறது.

இளம் தென்றல்அன்பாலயத்தின் நிதி திரட்டும் ஆண்டு இசை நிகழ்வாகும். ஆண்டுதோறும் நடத்தப்படும் இந்த நிகழ்வானது, அன்பாலயத்தின் தற்போதைய திட்டங்களுக்குத் தேவையான நிதியைத் திரட்டும் ஒரு நேரடி இசை நிகழ்வை உருவாக்கத் தங்கள் நேரத்தை ஒன்றிணைத்து தன்னார்வத் தொண்டு செய்யும் சிறந்த சமூகத் திறமைகளை வெளிப்படுத்துகிறது. ஒவ்வொரு ஆண்டும் பலர் வருகை தருவதுடன், பல வணிக நிறுவனங்கள் இந்நிகழ்விற்கு நிதியுதவி செய்வதோடு, உள்ளூர் சமூகத்தாலும் நன்கு ஆதரிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு அன்பாலயத்தின் இளம் தென்றல் நிகழ்வில் ஈழத்தில் உயிரினை நீத்த அனைவரையும் நினைவு கூர்ந்து ஒருநிமிட மௌன அஞ்சலி செலுத்தி இந்நிகழ்வு துடக்கி வைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து தமிழ்மொழி வாழ்த்துப் பாடலையும் ஆஸ்திரேலிய தேசிய கீதத்தை ஈஸ்ட்வுட் தமிழ் கல்வி மாணவ மாணவிகள் மிகவும் இனிமையாக பாடினார்கள். அத்துடன் இந்நிகழ்ச்சியை மகேஸ்வரன் பிரபாகரன் தொகுத்து வழங்கினார்.

சக்தி இசை குழுவின் செல்வன் டேவிட்டின் நெறியாழ்க்கையில் இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது. அன்பாலயம் ஆரம்பமான 15 வருடங்களுக்கு முன் சிறுமிகளாக பாடல்களை பாடிய கேஷிகா அமீர் மற்றும் அபிசாயினி பத்மசிறி அவர்கள் இப்போதும் அன்பாலயம் இசை நிகழ்வில் மிகவும் தலை சிறந்த பாடகிகளாக பாடி பலரது பாராட்டையும் பெற்றனர்.

இளைய தலைமுறையின் இசைக்கலைஞர்களை ஒன்று சேர்த்து ரவியின் நெறியாழ்க்கையில் திறம்பட நல்ல ஒரு இசை நிகழ்ச்சியை வழங்கினார் ஸ்ரீராம் ஜெயராமன்.

இடைவேளையை தொடர்ந்து சிட்னியில் பிறந்து வளர்ந்த இளைஞர்களின் பட்டி மன்றம் நடைபெற்றது. பட்டிமன்றத்தின் தலைப்பு இளைஞர்களாகிய நாம் சிட்னியில் தமிழர்களாக வாழ்வது இலகுவானதா அல்லது கடினமானதாஎன்று இரு தரப்பும் மிகவும் திறமையாக வாதாடினார்கள். இந்த பட்டிமன்றத்துக்கு நடுவராக மகேஸ்வரன் பிரபாகரன். செயல்பட்டார்.

அபிநயா ராஜ்குஜ்மர், தேஷனி கேதீஸ்வரன், சாரங்கா சச்சிதானந்தம் மற்றும் விஜய்யால் விஜய் ஆகியோர் இளைஞர்களாகிய நாம் இங்கு தமிழர்களாக வாழ்வது இலகுவே என்று மிகவும் திறமையாக நல்ல தமிழ் சொல்லாற்றலோடு வாதாடினார்கள். அபிராமி ரவீந்திரன், சஞ்சனா சிவசோதிராஜா, மயூரி இந்திரகுமார் மற்றும் சிஜார்தான் ஜசீதரன் தமிழர்களாக வாழ்வது கடினமே என்று மிகவும் ஆணித்தரமான வாதிட்டார்கள்.

அன்பாலயம் தாம் சேகரித்து வரும் நிதியில் தாயகத்தில் புரிந்துவரும் பலவகை சேவைகளையும் அதனூடாக பயன் பெற்றவர்களின் சுயசரிதையையும் காணொலியூடாக நிகழ்ச்சிக்கு வருகை தந்திருந்தவர்களுக்கு வழங்கினார்கள்.

தாயகத்தில் நட்பணிகளை தொடர்ந்து 15 வருடங்களாக செய்து வரும் அன்பாலயம், எப்போதுமே உள்ளூர் கலைஞர்களை வைத்தே நிகழ்ச்சியை மிகவும் திறம்பட நடாத்தி வருகின்றனர் அன்பாலயம் குழுவினர். இங்கே இப்படியான திறமை வாய்ந்த பாடகர்களும் இசைக்கருவிகளை வாசிக்கும் கலைஞர்களும் உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் பிரித்தானியாவின் ஆதரவுடன் விசாரணை

நிலையில், டீசல் இருப்புக்கள் பாதுகாக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன, அதே நேரத்தில் ஜுலை 21 முதல் பெட்ரோலும் விநியோகிக்கப்படும்.

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் நாட்டின் குடிமக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு வருவதுடன், 2 ஏக்கருக்கும் குறைவான வயல்களில் பயிரிட்ட நெற்செய்கையாளர்களின் கடன்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலை குறைந்துள்ள நிலையில், நாட்டிலும் எரிபொருள் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் முடிவடையும் தருவாயில் இருப்பதுடன், வெளிநாடுகளுடனான உதவிக்கான கலந்துரையாடல்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஏப்ரல் 21 தாக்குதல்குறித்து விசாரணைகள் இன்மையால் இந்த பிரச்சினை இன்னும் முழுமையாக தீர்க்கப்படவில்லை.

ஏப்ரல் 21 தாக்குதலின் முழுமையற்ற தன்மை காரணமாக இங்கிலாந்து அரசாங்கம் மற்றும் அவர்களின் புலனாய்வு சேவைகளின் உதவியை கோருவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையே காரணம் என்பதுடன், பொதுமக்களின் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் 19ஆவது திருத்தச் சட்டம் மீண்டும் கொண்டு வரப்படும்.

நாட்டின் அமைதியை சீர்குலைக்க முயற்சிக்கும் சக்திகள் சமூகத்திற்குள் இருக்கின்றன. இந்த கூறுகள் நாட்டின் முன்னேற்றத்தை சீர்குலைப்பதில் இருந்து தடை செய்யப்படும். நியாயமான கவலைகளைக் கொண்ட அமைதியான போராட்டக்காரர்கள் பிரச்சினைகள் அவர்களுக்கான தீர்வுகள் கண்டுபிடிக்கப்படும்.

நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் கருத்து வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு, தனிநபரின் கருத்து வேறுபாடுகளால் நாடு பாதிக்கப்படுவதற்கு இடமளிக்க வேண்டாம். பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் வகையில் அனைத்துக் கட்சி ஆட்சியை அமைக்க வேண்டும் என, பதில் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

## கோட்டா எதிராக மலேசியத் தமிழர்கள்

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் மதியுரைஞர் குழுப் பிரதிநிதியுமாகிய பேரா. இராமசாமி தலைமையில் அணிதிரண்ட தமிழர்கள், இனப்படுகொலையினை சிங்கப்பூர் வெளியேற்றி சர்வதேச நீதிமன்றிடம் கையளிக்க வேண்டும் என்ற முழக்கத்தினை எழுப்பினர்.

மலேசியத் தமிழர் அரசியல் பிரதிநிதிகளான சதீஸ் முனியாண்டி, டேவிட் மர்செல் உட்பட பல தமிழர் அமைப்பினர் இதில் பங்கெடுத்திருந்தனர்.

சிங்கப்பூர் தூதரைச் சந்தித்து கோரிக்கை மனுவினை கையளித்து, தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து சிங்கப்பூரில் இருந்து வெளியேற்றப்பட்டு சர்வதேச நீதிமன்றிடம் இனப்படுகொலையாளியான கோட்டாபயவை கையளிக்க வேண்டும் என்ற கோரிக்கையிகை முன்வைத்தனர்.

சர்வதேச நியாயாதிக்கத்தின் கீழ் கோட்டாபய ராஜபக்சவை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தொடர் போராட்டங்களை முன்னெடுத்துள்ளது.

போர் குற்றங்களில் ஈடுபட்ட சிறிலங்காவின் அரசியல், இராணுவ தலைவர்களுக்கு எதிராக ஐ.நா உறுப்பு நாடுகள், சர்வதேச நியாயாதிக்கத்தின் கீழ் சட்ட நடவடிக்கையினை முன்னெடுக்க வேண்டும் என ஐ.நா மனித உரிமைச்சபையின் ஆணையாளர் மிச்சல் பசேலே அம்மையார் அவர்கள் முன்னர் அழைப்பொன்றினை விடுத்திருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## வாக்களிக்க வரும் எம்.பி.க்களுக்கு பாதுகாப்புக்கு..

ஆதரிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களை அவர்கள் கோரியுள்ளனர்.

பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஜே. வி. பி. தலைவர் அநுரகுமார திஸநாயக்க, சிறீ லங்கா பொதுஜன பெரமுனவை சேர்ந்த டலஸ் அழகப்பெரும ஆகியோர் நாடாளுமன்றத்தில் நாளை செவ்வாய்க்கிழமை வேட்புமனுக்களை வழங்கவுள்ளனர்.

ஜனாதிபதிக்கான தெரிவில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சிறீ லங்கா பொது ஜன பெரமுன கட்சி ஆதரவு தெரிவித்துள்ளது.

ஆனால், இந்த விடயம் அந்தக் கட்சிக்குள் முரண்பாட்டை உருவாக்கியுள்ளது. இதனால், ரணில் ஆதரவு அணி – டலஸ் ஆதரவு அணி என அந்தக் கட்சியினர் இரண்டாக பிளவுற்றுள்ளனர்.

விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார போன்றோரின் 10 அரசியல் கட்சிகளும் தமது கோரிக்கைகள் தொடர்பில் வேட்பாளர்களுடன் பேசிய பின்னரே இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்று அறிவித்துள்ளன.

இதேசமயம், வாக்களிக்க வரும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு அளிக்குமாறு பொது பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வெளிமாவட்டங்களிலிருந்து கொழும்புக்கு வரும் பாராளுமன்ற உறுப்பினர்களை முற்கூட்டியே வருமாறு அறிவுறுத்தப்பட்டது.

வேட்புமனு தாக்கல் மற்றும் வாக்குப் பதிவை முன்னிட்டு பாராளுமன்றத்துக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

## குறுந்தூர் மலையில் விகாரை கட்டுவதற்கு...

இதுகுறித்து இரா.சாணக்கியன் ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

நாங்கள் இருவரும் வடக்கு, கிழக்கில் சட்டவிரோதமான முறையில் இடம்பெறும் பல்வேறு விடயங்களுக்கு கடுமையான முறையில் எதிர்ப்பினை வெளியிட்டு வருகின்றோம்.

குறிப்பாக குறுந்தூர் மலையில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டுள்ள விகாரை தொடர்பிலும் நடவடிக்கை எடுத்துள்ளோம். எனவேதான் எங்களுக்கு எதிராக சேறு பூசும் நடவடிக்கையினை இந்த தேரர் முன்னெடுத்துள்ளார்.

தற்போது இலங்கையில் அனைத்து இனங்களும் ஒற்றுமையாக ஒருமித்து பயணிக்கும் நிலையில் இவ்வாறான சிலரின் செயற்பாடுகளினால் இன நல்லிணக்கம் பாதிக்கப்படும் அபாயம் காணப்படுகின்றது.

இதன்காரணமாகவே இவ்வாறான இனவாதிகளின் செயற்பாடுகளுக்கு நாம் தடைகளை ஏற்படுத்துகின்றோம். எனக் குறிப்பிட்டுள்ளார்.

## பங்காளிகளிடம் சஜித் விடுத்த கோரிக்கை..

கலந்துகொண்டுள்ளனர். பங்காளிக் கட்சிகள் சார்பில் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, கலாநிதி ஜி வீரசிங்க, பிரேமநாத் டோலவத்த, வீரசுமண வீரசிங்க, கெவிந்து குமாரதுங்க, , அசங்க நவரத்ன உட்பட குழுவினரும் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி வாக்கெடுப்பில் தானும் பங்குபெறவுள்ளதால் கட்சித் தலைவர்கள் தமக்கு ஆதரவளிக்க வேண்டும் என, சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்துள்ளார்.

## ஜனாதிபதி தேர்வுக்கான...

பொதுச் செயலாளர் தம்மிக தசநாயக்கவினால் அறிவித்தல் விடுக்கப்படும்.

அதன் பின்னர் அரசியல் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கட்சியின் வேட்பாளர்களை முன்மொழிவர்.இதனை மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்பினர் வழிமொழிவர்.

இதன்போது தெரிவாகும் நாடாளுமன்ற உறுப்பினர், பரிந்துரை முன்வைக்கப்படும் சந்தர்ப்பத்தில் சபையில் பிரசன்னமாகியிருக்க வேண்டியது அவசியமாகும்.

குறித்த சந்தர்ப்பத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்காக போட்டியிடும் வேட்பாளர் சபை நடவடிக்கைகளில் பங்கேற்றிருக்காவிட்டால் அவர் நிராகரிக்கப்பட்டவராக கருதப்படுவார்.

அதன் பின்னர் வேட்பாளர் தான் இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்கு விருப்பம் கொண்டிருப்பதாக நாடாளுமன்ற பொதுச் செயலாளருக்கு எழுத்துமூலம் அறிவிக்க வேண்டும்.

ஜனாதிபதியை தெரிவு செய்யும் சட்டத்திற்கு அமைய சபாநாயகர் தவிர்ந்த 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் எவரேனும் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட முடியும்.

அதேநேரம் இது தொடர்பில் எந்தவித மட்டுப்பாடுகளும் இல்லை. சபாநாயகர் ஜனாதிபதி வேட்பாளராக முன்னிலையாக முடியாவிட்டாலும் ஜனாதிபதி பதவிக்கு போட்யிடும் வேட்பாளருக்கு வாக்களிக்க முடியுமென்பது விசேட அம்சமாகும்.

வேட்புமனு தாக்கல் செய்யும் நாளைய தினமும் வாக்கெடுப்பு நடைபெறும் நாளை மறுதினமும் நாடாளுமன்ற வளாகம் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளுக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்தாக நாடாளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.



## உகந்தை மலை முருகன் ஆலய ஆடி வேல் விழா கொடியேற்றம் 29 இல் 11இல் தீர்த்தம்




**( காரைதீவு நிருபர் சகா)**

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தை மலை முருகன் ஆலய வருடாந்த ஆடி வேல் விழா உற்சவம் எதிர்வரும் 29 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

திருவிழா ஆலய பிரதம குரு சிவஸ்ரீ க.கு.சீதாராம் குருக்கள் தலைமையில் சிறப்பாக நடைபெறவுள்ளது.

ஆடிவேல் விழா உற்சவம் தொடர்ந்து 13 நாட்கள் இடம்பெற்று ஆகஸ்ட் 11-ஆம் தேதி தீர்த்த உற்சவத்துடன் நிறைவடையை இருப்பதாக ஆலய பரிபாலன சபை வண்ணக்கர் டி.எம்.சுதுநிலமே திசாநாயக்க தெரிவித்தார்.

ஆடிவேல் விழா உற்சவத்தை முன்னிட்டு தற்பொழுது பெருந்திரளான பக்தர்கள் அங்கு பாதயாத்திரை யாக செல்ல ஆரம்பித்துள்ளனர். கதிர்காமம் செல்லும் பாதயாத்திரை அடியார்கள் உகந்தை மலை முருகன் ஆலயவளாகத்தில் தங்கியிருந்து செல்வதுதான் வழக்கம்.

இம் முறை கதிர்காமத்திற்கான காட்டுப் பாதை எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'அரகலய போராட்டக் குழு'வினர் மக்கள் காங்கிரஸ் முக்கியஸ்தர்களுடன் சந்திப்பு!




காலி முகத்திடல் அரகலய'' போராட்டக் குழுவினரின் பிரதிநிதிகள், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்களை நேற்று கட்சி அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது, எதிர்வரும் புதன்கிழமை (20) புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வது தொடர்பில், அரகலய பிரதிநிதிகள் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

அத்துடன், அவர்கள் அரசியல், சமூக, பொருளாதார விடயங்களில் தமது கருத்துக்களையும், தாம் கொண்டிருக்கும் திட்டங்களையும் வெளிப்படுத்தியதோடு, அது தொடர்பான ஆவணத்தையும் கையளித்தனர்.

தொடர்ச்சியாக அரசியல் கட்சிகளுடன் அரகலய போராட்டக் குழுவினர் நடாத்தி வரும் பேச்சு வார்த்தையின் ஒரு கட்டமாகவே இந்த சந்திப்பு இடம் பெற்றது.

## குப்பைகளினாலும், தூர்வாரப்படாத வடிகான்களினாலும் பாரிய சுகாதார சீர்கேட்டை எதிர்நோக்கும் கல்முனை மாநகர்

**(மாளிகைக்காடு நிருபர்)**

கல்முனை மாநகர பிரதேசங்களில் அண்மைக்காலமாக ஒழுங்கான திண்மக்கழிவகற்றல் இன்மை காரணமாக திண்மக்கழிவுகள் அரச மற்றும் தனியார் காரியாலயங்களுக்கு அருகிலும், பாடசாலைகளுக்கு அருகிலும், சந்திகளிலும், நீர்நிலைகள், மைதானங்கள், கடற்கரை ஓரங்கள் போன்ற பிரதேசங்களில் மக்கள் குவித்து வருகின்றனர்.

இதனால் இரவில் கட்டாக்காலி மாடுகளும், தெருநாய்களும் குப்பைகளை கிளறி விடுவதனால் பாரிய துர்நாற்றம் வீசுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். அது மாத்திரமின்றி டெங்கு பரவும் இடங்கள் பல இந்த குப்பை கொட்டப்பட்டுள்ள இடங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் வடிகான்கள் கூட மண்களினால் நிரம்பி நீர் வழிந்தோட முடியாத நிலையில் உள்ளது. சில கான் மூடிகள் நீண்ட காலமாக உடைந்து காணப்படுகின்றது. இதனால் வீதிபோக்குவரத்தும் சில நேரங்களில் தடைப்படுவதாக மக்கள் விசனம் வெளியிடுகின்றனர். ஒழுங்கான திட்டமிடல்களோ, சரியான திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவமோ இல்லாதமையினால் இந்த நிலை உருவாகியுள்ளது.

மேலும் இது தொடர்பில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்கள் கல்முனை மாநகர சபைக்கு அறிவித்திருந்தும் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்து வருகிறது.

இந்த விடயங்களுக்கு பொறுப்பான கல்முனை மாநகர சுகாதாரப்பிரிவின் பொறுப்பதிகாரியான பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.கே.எம். அர்ஷத் காரியப்பரை தொடர்புகொண்டு இவ்விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுப்பது பற்றி கேட்டறிந்த போது, குறித்த பிரச்சினையை நானும் என் கண்களினால் கண்டேன். இந்த விடயம் மாநகர சுகாதாரத்துறைக்கு ஏற்பட்டுள்ள பாரிய இழுக்காக காண்கிறேன். வடிகான் தூர்வாருதல் போன்றவை பொது வசதிகள் பிரிவின் கீழ் வருவதனால் அவை ஆணையாளர், பிரதி ஆணையாளர் வசமே உள்ளது. குறைபாடுகளை தீர்க்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கே உள்ளது.

எங்களின் சுகாதரப் பிரிவு கடந்த காலங்களில் குறைந்தளவு வளங்களை கொண்டு நிறைவான சேவையை வழங்கி வந்தோம். ஆனால் தற்போது சுகாதரப்பிரிவுக்கான வாகனங்கள் ஆணையாளர் கட்டுப்பாட்டில் இருப்பதனால் தின்மக்கழிவகற்றலை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியாமல் இருக்கிறது. இதனால் சுகாதரப்பிரிவின் சேவைகள் முடங்கி மந்தகதியிலையே இயங்குகிறது என்று தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் கல்முனை மாநகர சபையில் ஆராய்ந்த போது முதல்வர், ஆணையாளர் ஆகியோரே இந்த நிலைக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்களே இவற்றெல்லாம் முடக்கி வைத்துள்ளனர். இதனால் ஏற்படப்போகும் சகல தீமைகளுக்கும் இவர்களே பொறுப்புதாரிகள். இது தொடர்பில் கல்முனை மாநகர உயர் அதிகாரிகளின் முழுமையான ஒத்துழைப்பும், ஊழலற்ற நிறைவான வளப்பங்கீடும் இருந்தால் இந்த பிரச்சினைகளை அர்ப்பணிப்பு மிக்க மாநகர சுகாதாரப்பிரிவின் ஊழியர் படையணியை கொண்டு முழுமையாக தீர்க்க முடியும் என்று தெரிவித்தனர்.

## ஒரு வாரத்திற்கு பின்னர் பெற்றோல் வருகை




**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

தலவாக்கலை நகரிலுள்ள ஐஓசி எரிபொருள் நிலையத்திற்கு ஒரு வாரத்திற்கு பின்னர் நேற்று (18) பெற்றோல் வந்ததையடுத்து அதனை பெற்றுக் கொள்வதற்காக முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் வரிசையில் நின்றன. பெற்றோலை பெற்றுக்கொள்வதற்காக கடந்த 5 நாட்களாக 300 ற்கு அதிகமான முச்சக்கர வண்டிகள் வரிசையில் காத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சிறப்பாக நடைபெற்ற திருக்கோவில் கொடியேற்றம்




**(வி.ரி. சகாதேவராஜா)**

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை உற்சவ திருக்கொடியேற்ற நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக்குருக்கள் முன்னிலையில், ஆலயகுரு சிவஸ்ரீ அங்குசநாதக்குருக்கள் தலைமையில் உற்சவம் நடைபெற்றது.

ஆலய பரிபாலன சபை தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ், வண்ணக்கர் வன்னியசிங்கம் ஜயந்தன் உள்ளிட்ட பரிபாலன சபையினர், ஆயிரக்கணக்கான அடியார்கள் கலந்து கொண்டனர்.

கடந்த வருடம் ஆடிவேல் உற்சவம் கொரோனா தீநுண்மியின் தாக்கம் காரணமாக நடைபெறவில்லை.

இம்முறை இதனை வெகு சிறப்பாக நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக ஆலய தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தெரிவித்தார்.

இந்த உற்சவம் 17 நாட்கள் நடைபெற்று ஜூலை மாதம் இருபத்தி எட்டாம் (28)தேதி வியாழக்கிழமை தீர்த்த உற்சவத்துடன் நிறைவடைய இருக்கின்றது.

இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மக்களால் சிறிய கோயிலாக அமைக்கப்பட்டு பின்பு இராஜராஜ சோழர் காலத்தில் கற்கோயில் அமைக்க பெற்று நான்கு கால பூஜைகள் செய்யப்பட்டு ஆடி அமாவாசை உற்சவமும் செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

தினமும் பகலில் ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டுவருகிறது.

பிதிர்க்கடன் செலுத்துகின்ற ஆடி அமாவாசை உற்சவம் என்பதால் இம்முறை பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்வார்கள் என்பதற்காக முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## முன்பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு




**(ஹஸ்பர்)**

மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் முன்பிள்ளை அபிவிருத்திக்கான தேசிய செயலகத்தின் அனுசரணையில் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட முன்பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று (18) மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் பி.எச்.என். ஜயவிக்ரம தலைமையில் நடைபெற்றது.

இம் மாதம் 14ம் திகதி தொடக்கம் 20ம் திகதி வரை முன்பிள்ளை தேசிய வாரமாக அனுஷ்டிக்கப்படுவதுடன் அதனை முன்னிட்டே இந்த உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. அதனடிப்படையில் 2023ம் ஆண்டு முன்பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட இருக்கின்ற வறுமைக் கோட்டிற்குட்பட்ட மற்றும் பெற்றோர்களை இழந்த சிறுவர்கள் இதன்போது முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டார்கள்.

மொத்தமாக 77 முன்பிள்ளை மாணவர்களுக்கு இந்த கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட உள்ளது. நாட்டில் தற்போது நிகழ்கின்ற போக்குவரத்து நிலைமையை கருத்திற்கொண்டு திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 14 மாணவர்கள் மாவட்ட செயலகத்திற்கு அழைக்கப்பட்டு அவர்களுக்கான இந்த கற்றல் உபகரணங்கள் இதன்போது வழங்கி வைக்கப்பட்டதுடன் ஏனைய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் அந்தந்த பிரதேச செயலகம் மூலம் வழங்கி வைக்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ், மேலதிக அரசாங்க அதிபர் (காணி ) எஸ்.சுதாகரன், மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஆர். கே.எஸ். குருகுலசூரிய, மாவட்ட செயலக முன்பிள்ளை அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.நப்ரத் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.



# தமிழ் தேசிய பரப்பில் இருக்கின்ற தமிழ் கட்சிகள் ஒன்று படுவதே காலத்தின் தேவை

**(பாறுக் ஷிஹான்)**

தமிழ் மக்களின் இருப்பையும் உரிமை சார்ந்த விடயங்களையும் பாதுகாக்கின்ற செயற்பாட்டில் தமிழ் தேசிய கட்சிகள் ஈடுபடவேண்டும் என அம்பாறை மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் குறிப்பிட்டார்.

சமகால அரசியல் நிலைமைகள் மற்றும் புதிய ஜனாதிபதி தேர்வு தொடர்பாக அம்பாறை மாவட்டம் ஆலையடிவேம்பு பகுதியில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று (17) நடாத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த நாட்டில் புதிய ஜனாதிபதியை தேர்வு செய்கின்ற சந்தர்ப்பம் தற்போது வந்திருக்கின்றது. இந்த நாட்டில் அராஜகங்களை மேற்கொண்ட பொருளாதார ரீதியாகவும் சீரழித்த மற்றும் எமது சிறுபான்மை இனத்தின் இருப்பை அழிப்பதற்காகவும் மத ரீதியான செயற்பாடுகளை முன்னெடுத்தும் எமது இனத்தின் அடையாளத்தை அழிப்பதற்காக வந்த மிக மோசமான ஒரு ஜனாதிபதி சிங்கள தமிழ் முஸ்லீம் என அனைத்து மக்களினாலும் துரத்தியடிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் இந்த நாட்டில் புதிய ஒரு ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்காக அனைத்து பாராளுமன்ற பிரதிநிதிகளினாலும் தெரிவு செய்யப்படவிருக்கின்றார். வேட்புமனுத் தாக்கல் இடம்பெறவுள்ள நிலையில் ரணில் விக்கிரமசிங்க டளஸ் அழகப்பெரும எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச ஜேவிபி தலைவர் அனுரகுமார திசாநாயக்க போன்றவர்கள் களமிறக்கபட உள்ளனர்.



இந்நிலையில் தமிழ் பரப்பில் இருக்கின்ற தமிழ் தேசியத்தின் பால் ஈர்க்கப்பட்ட கட்சிகள் அத்தோடு தமிழர் நலன் சார்ந்து செயற்படுகின்ற தமிழ் தேசிய பரப்பிற்கு அப்பால் இருக்கின்ற மலையக கட்சிகள் என்ன செய்யப்போகின்றார்கள் என்பது முக்கியமானதொன்றாக இருக்கின்றது.

தமிழ் தேசிய பரப்பில் இருக்கின்ற தமிழ் கட்சிகள் தெரிவு செய்யப்படவுள்ள ஜனாதிபதி அல்லது தெரிவு செய்யப்படவிருக்கின்ற வேட்பாளர்களின் என்ன கோரிக்கைகளை முன்வைக்க போகின்றார்கள் என்கின்ற விடயம் முக்கியமானதொன்றாக இருக்கின்றது. வட கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களுக்கு அதிகளவான பிரச்சினை காணப்படுகின்றது.

புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினை மட்டுமல்லாமல் ஏனைய இறைமை சார்ந்த பிரச்சினைகள் எங்கள் இனம் சார்ந்த பிரச்சினைகள் கூடுதலாக காணப்படுகின்றது. விசேடமாக அம்பாறை மாவட்டத்தில் இருக்கின்ற தமிழர்களின் நலன் சார்ந்த விடயங்கள் கொடுக்கப்படுகின்ற கோரிக்கையானது உள்ளடக்கப்படவேண்டிய முக்கியமான ஒன்றாகியுள்ளது. வடக்கு கிழக்கு பிரதேசங்களில் மிக முக்கியமானது அம்பாறை மாவட்டமாகும்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழர்களின் இருப்பு என்பது தற்போது கேள்விக்குறியாக மாறியுள்ளது. அவர்களின் உரிமை சாரந்த விடயங்கள் இனம் சார்ந்த விடயங்கள் மதம் சார்ந்த விடயங்கள் இருப்பு சார்ந்த விடயங்கள் என்பன தற்போது கேள்விக்குறியாகி கவலைக்கிடமாகியுள்ளது. இந்த வகையில் தமிழ் தேசிய பரப்பில் உள்ள தமிழ் தேசிய கட்சிகள் விசேடமாக தமிழ் தேசிய கூட்டமைப்பு அதனோடு தமிழ் தேசிய கட்சிகள் கஜேந்திர குமார் பொன்னம்பலம் அவர்களின் கட்சி என்பன கூடுதலான கவனத்தினை செலுத்த வேண்டி இருக்கின்றது.

அதனடிப்படையில் அம்பாறை மாவட்டத்தின் மிக முக்கியமான பிரச்சினையாக இருப்பது முதலாவது கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் உரிமைமறுக்கப்பட்டிருக்கின்றது. இச்செயலகத்திற்கான நிதி மற்றும் காணி அதிகாரம் என்பன கொடுக்கப்படாமல் தற்போதும் கூட மறுக்கப்பட்டு காணப்படுகின்றது. அதனடிப்படையில் அம்பாறை மாவட்ட மக்களின் முதலாவது கோரிக்கையாக வடக்கு பிரதேச செயலகத்தின் காணி நிதி அதிகாரங்கள் என்பன கொடுக்கப்பட வேண்டும். இரண்டாது தொல்லியல் மற்றும் வன இலாக்காவினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள விடயங்கள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் தொல்லியல் என்ற போர்வையில் விகாரைகள் அமைக்கப்படுவதற்கான நடவடிக்கைள் மற்றும் தமிழர்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்ற நிலைமைகள் நிறுத்தப்பட வேண்டும். இவ்வாறான விடயங்கள் அம்பாறை மாவட்டத்தில் காணப்படுகின்ற முக்கியமான பிரச்சினைகளாகும்.

அந்த வகையில் புதிய ஜனாதிபதி வேட்பாளர்களிடையே தமிழ் தேசிய கட்சிகள் இவ்வாறான விடயங்களை வேண்டுகோளாக முன்வைப்பது அவசியமாகும். இது அம்பாறை மாவட்ட அனைத்து மக்களின் முக்கிய கோரிக்கையாக காணப்படுகின்றது. இது தவிர அண்மையில் கூட பாராளுமன்ற உறுப்பினர் சி.வி விக்னேஸவரன் வடக்கை மையப்படுத்தி கருத்துக்களை முன்வைத்து வருகின்றார். இதில் வடக்கை மட்டும் முக்கியமான கோரிக்கைகளாக வைக்காமல் அம்பாறை மாவட்டத்தின் இருப்பை அல்லது பாரம்பரியத்தை பாதுகாக்கிற விடயத்தை முக்கியமாக முன்வைக்க வேண்டும்.

வடக்கு பிரதேச செயலகத்திற்கான அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும். தொல்லியல் என்ற போர்வையில் அத்துமீறி பிடிக்கப்பட்டுள்ள காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். அதில் விகாரைகள் அமைப்பது தடை செய்யப்பட வேண்டியதொன்றாக இருக்கின்றது. அது மட்டுமன்றி அனைத்து தமிழ் தேசிய பரப்பில் உள்ள கட்சிகள் மட்டுமல்லாது மலையக கட்சிகள் ஆளும் கட்சியில் உள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட இந்த விடயத்தை முன்வைக்க வேண்டிய கடப்பாடு உள்ளவர்களாக இருக்கின்றீர்கள்.

தேர்தல் காலங்களில் மட்டும் இங்கு வந்து அம்பாறை மாவட்டத்தில் பிரதேச செயலகத்தை தரமுயர்த்தி தருவோம் என்ற போலி வார்த்தைகளை கூறாமல் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அம்பாறை மாவட்ட மக்களின் உரிமை சார்ந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். இவ்விடயம் தான் அம்பாறை மாவட்ட மக்கள் உங்கள் மீது வைக்கின்ற ஒரு விண்ணப்பமாக உள்ளது. தமிழ் தேசிய கூட்டமைப்பும் இதற்கான ஒரு நடவடிக்கையை எடுக்கும் என்று நினைக்கின்றேன். அது போன்று ஏனைய கட்சிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்ள விரும்பகின்றேன் என தெரிவித்தார்.

## மட்டக்களப்பு நகரில் சீரான முறையில் எரிபோருள் வழங்கி வரும் ஐ.ஓ.சி. எரிபோருள் நிரப்பு நிலையம்





மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள ஒரே ஒரு ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மிகவும் சீரான முறையில் மக்களுக்கு எரிபொருள் வழங்கப்பட்டு வருவதாக பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் இன்றையதினம் முன்னுரிமை அடிப்படையில் கற்பிணித் தாய்மார்கள், சிறு குழந்தைகளுடன் வைத்தியசாலைக்குச் செல்வோர், மாற்றுத்திறனாளிகள், திடீர் மரண விசாரணை அதிகாரிகள், ஊடகவியலாளர்கள், சுயதொழிலில் ஈடுபடுவோர், அவசர தேவைக்காக வைத்தியசாலைக்கு செல்வோர், விவசாயிகள், இணக்கசபை உறுப்பினர்கள், சுற்றுலாப்பிரயாணிகள், மதகுருமார், வருடாந்த உற்சவம் ஆரம்பமாகவுள்ள மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலய நிருவாகத்தினர் உள்ளிட்ட பலருக்கும் முன்னுரிமை அடிப்படையில் வரிசைக்கிரமமாக மிகவும் சீரான முறையில் பெற்ரோல் வழங்கப்பட்டன.

குறித்த எரிபொருள் நிலையத்தின் உரிமையாளரும் சமூக சேவையாளருமான தேசபந்து எம்.செல்வராஜா அவர்கள் எரிபொருள் நிலையத்திலேயே நின்று மக்களை ஒழுங்குபடுத்தி சீரான முறையில் அனைவருக்கும் பெற்றோல் வழங்குவதற்கு வசதிகளை மேற்கொண்டிருந்தார்.

ஏரிபொருள் தட்டுப்பாடான இக் காலகட்டத்தில் சீரான முறையில் அனைவருக்கும் பெற்றோல் வழங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்த குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளர் தேசபந்து எம்.செல்வராஜா அவர்களுக்கு மக்கள் இதன்போது நன்றிகளைத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் எரிபோருள் விநியோகம் தோடர்பாக இடம்பெற்ற விசேட கலந்துரையாடல்



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

எரிபொருள் தட்டுப்பாட்டினை முகாமை செய்யும் பொருட்டு விசேட பொறிமுறை ஒன்றை மட்டக்களப்பு மாவட்டத்தில் கையாளுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்

தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடல் நேற்று மாலை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரன் அவர்களது தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சினி ஸ்ரீகாந்த், பிரதேச செயலாளர்கள், இராணுவ மற்றும் பொலீஸ் உயர் அதிகாரிகள், எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது முன்னுரிமையின் அடிப்படையில் அத்தியாவசிய தேவைக்காக எரிபொருள் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் எரிபொருள் வழங்கலில் முறைகேடுகள் இடம்பெறாத வண்ணம் ஒன்லைன் நடைமுறைகளை கையாளுதல் மற்றும் அதன் நன்மைகள் தொடர்பாகவும் ஆழமாக கலந்துரையாடப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## ப்ரவேரியன் வோர் -19 சாம்பியன் பட்டத்தை வேன்றது சம்மாந்துறை விளையாட்டு கழகம்

**(நூருல் ஹுதா உமர்)**

சாய்ந்தமருதின் மூத்த விளையாட்டு கழகங்களில் ஒன்றான ப்ரவ் லீடர்ஸ் விளையாட்டுக்கழகத்தின் 40 வது ஆண்டை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டு கடந்த 2019 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு நாட்டின் அசாதாரண சூழ்நிலை மற்றும் கொரோனா காரணமாக காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட கிழக்கு மாகாண 32 முன்னணி கழகங்கள் பங்குபற்றிய ''ப்ரவேரியன் வோர் -19'' 20 க்கு 20 கடினபந்து





கிரிக்கட் சுற்றுத்தொடரின் சம்பியன் பட்டத்தை சாய்ந்தமருது பீமா விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி சம்மாந்துறை விளையாட்டுக்கழகம் தனதாக்கி கொண்டது.

சாய்ந்தமருது அஸ்ரப் ஐக்கிய பொதுவிளையாட்டு மைதானத்தில் ப்ரவ் லீடர்ஸ் விளையாட்டுக்கழகத் தலைவரும், மாவட்ட விளையாட்டு பயிற்றுவிப்பாளருமான ஏ.எம். றிபாஸ் தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற இறுதிப்போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற சம்மாந்துறை விளையாட்டுக்கழகம் முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயித்த 20 ஓவர்களில் 134 ஓட்டங்களை 08 விக்கட்டுக்களை இழந்து பெற்றுக்கொண்டது. சிறப்பாக துடுப்பெடுத்தாடிய சம்மாந்துறை விளையாட்டுக்கழக வீரர் எஸ்.எம். அப்ஹாம் 31 பந்துகளை எதிர்கொண்டு 33 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். சாய்ந்தமருது பீமா விளையாட்டுக்கழகம் சார்பில் சிறப்பாக பந்து வீசிய ஆர்.எம்.ரப்சன் 03 விக்கட்டுக்களை வீழ்த்தினார்.

அதனடிப்படையில்135 எனும் வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது பீமா விளையாட்டுக்கழகம் 18.4 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 114 ஓட்டங்களை மட்டும் பெற்று 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியை தழுவினர். சாய்ந்தமருது பீமா விளையாட்டுக்கழகம் சார்பில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஜே.எம். றிழ்வான் 34 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். இப்போட்டியின் ஆட்டநாயகனாக 33 ஓட்டங்களை பெற்றதுடன் எதிரணியின் நான்கு விக்கட்டுக்களையும் வீழ்த்திய சம்மாந்துறை விளையாட்டுக்கழக வீரர் எஸ்.எம். அப்ஹாம் தெரிவு செய்யப்பட்டதுடன் தொடராட்டக்காரராக நிந்தவூர் இம்ரான் விளையாட்டு கழக வீரர் நிக்ஸி அஹமட் தெரிவானார்.

இப்போட்டிக்கு கொழும்பு மாவட்ட வாகன போக்குவரத்து பிரதம பரிசோதகரும், சுற்றுத்தொடரின் பிரதான அனுசரணையாளருமான பொறியியலாளர் ஏ.எல்.எம். பாரூக் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன் முக்கியஸ்தர்கள் பலரும் அதிதிகளாக கலந்து கொண்டு வெற்றி கேடயத்தையும், பரிசில்களையும் வழங்கி வைத்தனர். இந்த மைதானத்தில் இவ்வருடம் நடந்த முடிந்த சகல சுற்றுத்தொடர்களிலும் பலம்வாய்ந்த அணிகளை வீழ்த்தி சம்மாந்துறை விளையாட்டுக் கழகத்தினர் தொடர்ச்சியாக மூன்று சம்பியன் பட்டங்களை பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் மதிப்பளிக்க வேண்டும்

**(ஹஸ்பர்)**

நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் தொழில் பட வேண்டும் என கிண்ணியா நகர சபை உறுப்பினர் எம். எம். மஹ்தி தெரிவித்துள்ளார்.

அவரால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

நாடும் நாட்டு மக்களும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாக காரணமான எவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப் பட்டாலும் போராட்டங்கள் ஓயப் போவதில்லை.

போராட்டக்காரர்களின் எதிர்பார்ப்புகளுக்கு மாற்றமாக ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தால் அத் தெரிவுக்கு துணை நிற்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் போராட்டக்காரர்களினதும் நாட்டு மக்களினதும் மன உளைச்சலுக்கு உள்ளாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

எனவே இந்த நாட்டையும் நாட்டு மக்களையும் பேரழிவுகளில் இருந்தும் உயிரிழப்புகளிலிருந்தும் பாதுகாப்பதாக இருந்தால் போராட்டக்காரர்களினதும் மக்களினதும் எதிர்பார்ப்புகளை பிரதிபலிக்கும் ஒருவரை ஜனாதிபதியாக தெரிவு செய்ய வேண்டும் எனவும் உருக்காமாக கேட்டுக்கொள்கின்றேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# கல்முனையில் எரிவாயு விநியோகத்திற்கான விசேட நடைமுறை ஆரம்பம்: திட்ட மேம்படுத்தல் தொடர்பில் மீளாய்வுக் கலந்துரையாடல்

(அஸ்லம் எஸ்.மௌலானா)



கல்முனை மாநகர பிரதேசங்களில் எரிவாயு மற்றும் எரிபொருள் விநியோகத்தை குளறுபடிகளின்றி சீராக முன்னெடுப்பதற்காக குடும்ப அட்டை மற்றும் பாஸ் முறைமை அமுலுக்கு வந்துள்ளது. இத்திட்டத்தை மேம்படுத்துவது தொடர்பில் அதிகாரிகள் மட்ட ஒருங்கிணைப்பு மீளாய்வுக் கலந்துரையாடல் நேற்று திங்கட்கிழமை கல்முனை மாநகர முதல்வர் செயலகத்தில் இடம்பெற்றது.

கல்முனை மாநகர முதலவர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் பிரதேச செயலாளர்கள், மாநகர பிரதி முதல்வர், ஆணையாளர், பொலிஸ் அதிகாரிகள், எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்கள், எரிவாயு நிறுவனங்களின் பிராந்திய அதிகாரிகள் மற்றும் சிவில் அமைப்புகளை உள்ளடக்கிய விசேட செயலணி மேற்கொண்ட தீர்மானத்திற்கமைவாக கல்முனை மாநகர சபை மற்றும் பிரதேச செயலகங்கள் இணைந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றன.

கடந்த மாதம் 04ஆம் திகதி தொடக்கம் பல தடவைகள் இச்செயலணி மாநகர சபையில் கூடி, இப்பிரதேசங்களில் எரிவாயு, மண்ணெண்ணெய், பெற்றோல் மற்றும் டீசல் விநியோகத்தின்போது ஏற்படுகின்ற குழப்பங்களை தவிர்ப்பதற்கும் முறைகேடான செயற்பாடுகள், பதுக்கல் மற்றும் கருப்புச்சந்தை வியாபாரத்தை முறியடிப்பதற்கும் அனைத்து மக்களுக்கும் அவை இலகுவாக கிடைப்பதற்கும் ஏற்ற வகையில் விநியோக நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவது தொடர்பாக பல்வேறு கோணங்களில் ஆலோசித்து, அதற்கான திட்டமிடல்களை மேற்கொண்டிருந்தது.

உத்தேச நடைமுறைகள் தொடர்பாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரை மாநகர முதல்வர் தலைமையிலான குழுவொன்று இரு தடவைகள் சந்தித்து, கலந்துரையாடியிருந்ததுடன் அவரது அனுமதி, ஆலோசனைகளையும் பெற்றுக்கொண்டிருந்தது.

இதையடுத்து கல்முனை மாநகர சபைக்குட்பட்ட அனைத்துக் குடும்பங்களும் எரிவாயு மற்றும் மண்ணெண்ணெய் என்பவற்றை பெற்றுக் கொள்வதற்கான குடும்ப அட்டையும் அதனோடிணைந்ததாக வாகனங்களுக்கான எரிபொருள் கொள்வனவுக்காக விசேட அனுமதிப்பத்திரமும் (பாஸ்) கிராம சேவகர் ஊடாக தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இதன் பிரகாரம் சில இடங்களில் எரிவாயு விநியோகம் குளறுபடியின்றி சீராக முன்னெடுக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

அதேவேளை, கல்முனை மாநகர சபைக்குட்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு மண்ணெண்ணெய் வந்ததும் இதே அடிப்படையில் குடும்ப அட்டையின் பிரகாரம் தேவையான ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதனை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாநகர முதலவர் ஏ.எம்.றகீப் தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக கடற்றொழில், விவசாயம், கைத்தொழில்துறைகளுக்கும் உணவுப் பண்டங்கள் உற்பத்தியாளர்களுக்கும் தேவையானளவு மண்ணெண்ணெய், டீசல் போன்றவற்றை அந்தந்த திணைக்களங்களின் சிபார்சுகளுக்கேற்ப முறையாக விநியோகிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# கல்வி நலன்புரிச்சங்க அங்குரார்ப்பணமும் கற்றல் உபகரணங்கள் வழங்கல் மற்றும் கௌரவிப்பு நிகழ்வும்





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கல்வி நலன்புரிச்சங்கத்தின் உத்தியோகபூர்வ அங்குரார்ப்பண நிகழ்வும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கலும் கௌரவிப்பு நிகழ்வும் சனிக்கிழமை ஓட்டமாவடி மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

எஸ்.ஐ.எம்.சாதாத் ஆசிரியர் (BA) தலைமையில் இடம்பெற்ற இம்முப்பெரும் நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி அல்ஹாஜ் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி கலந்து கொண்டார்.

அத்துடன், கௌரவ அதிதிகளாக வெளிவிவகார அமைச்சின் சார்க் நாடுகளுக்கான பணிப்பாளர் என்.எம்.எம்.அனஸ், கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எம்.ரீ.எம்.றிஸ்வி மஜீதி, விசேட அதிதிகளாக மட்டக்களப்பு மத்திய கல்வி வலய பிரதிக் கல்விபணிப்பாளர் ஜெ.தாஜுன் நிஷா, மட்டக்களப்பு மத்தி கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் ஏ.எம்.ஜாபிர் கரீம், எமது அதிதியாக ஓட்டமாவடி, வெளிவாரிப் பட்டப்படிப்பு கற்கை நிலைய இணைப்பாளர் ஏ.யூ.எம்.பாரூக், சிறப்பதிதிகளாக கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி கல்விக்கோட்ட பாடசாலைகளின் அதிபர்களும் கலந்து சிறப்பித்தனர்.

குறித்த நிகழ்வில் 23 பாடசாலைகளைச்சேர்ந்த 46 தேவையுடைய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

விஷேட அம்சமாக பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி அல்ஹாஜ் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி அவர்களுடன் கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எம்.ரீ.எம்.றிஸ்வி மஜீதி மற்றும் ஆசிரியர் பாறுக் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

இதில் பெருந்தொகையான பெற்றோர்களும் கலந்து சிறப்பித்தனர்.

# அரசாங்க போது ஊழியர் சங்கத்தின் கல்முனை மாநகர சபை ஊழியர்களுக்கான கிளை ஆரம்பம்





(நூருல் ஹுதா உமர்)

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் கல்முனை மாநகர சபை ஊழியர்களுக்கான கிளை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. சங்கத்தின் கல்முனை தலைமையகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் வைத்து கிளையின் இணைப்பாளராக ப. பிரதீபனும், செயலாளராக எம். விக்னேஸ்வரனும் ஊழியர்களால் ஒரு மனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

அதே போல இக்கிளைக்கு நிர்வாக உறுப்பினர்களாக சுகாதார பிரிவில் வி. தர்மராஜாவும், வேலை பகுதியில் எம்.ஏ. அனஸூம், பாதுகாப்பு பிரிவில் டி. பாஸ்கரனும், சாரதிகள் சார்பாக எஸ். கேதீஸ்வரனும் தெரிவு செய்யப்பட்டதுடன் நிர்வாக ஆலோசகராக க. பத்மராஜா நியமிக்கப்பட்டு உள்ளார்.

குட்ட, குட்ட தலை குனிந்த காலம் போய் விட்டது, அநியாயம், அக்கிரமம் ஆகியவற்றுக்கு பயந்த காலம் மலையேறி விட்டது என்று கிளை நிறுவப்பட்டதை தொடர்ந்து ஊழியர்கள் மகிழ்ச்சி தெரிவித்தார்கள். மாநகர சபை நிர்வாகத்தின் அச்சுறுத்தல்கள், எதிர்ப்புகள், கெடுபிடிகள் ஆகியவற்றுக்கு மத்தியில் கிளையை வெற்றிகரமாக ஆரம்பித்து இருப்பதாக சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

# திருமலை பிரதான பேருந்து தரிப்பிடத்தின் வாயிலை மறித்து பேருந்து உரிமையாளர்கள் ஆர்ப்பாட்டம்





(எப்.முபாரக்)

திருகோணமலை பிரதான பேருந்து தரிப்பிடத்தின் வாயிலை மறித்து தமக்கான டீசலை பெற்று தருமாறு கோரி தனியார் பேருந்து உரிமையாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தின் போது இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துக்களை பேருந்து தரிப்பிடத்துக்குள் செல்லவிடாமல் ஆர்ப்பாட்டக்காரர்கள் மறித்தனர்.

இவ் ஆர்ப்பாட்டம்(17)இடம்பெற்றது.

இது தொடர்பில் திருகோணமலை தலைமையக பொலிஸார் இலங்கை போக்குவரத்து சபையுடன் கலந்துரையாடி, 2500 லீட்டர் டீசலை தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு வழங்குவதாக கூறியதையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அவ்விடத்தை விட்டு கலைந்து சென்றனர்.

இந்த போராட்டத்தினால் தூர இடங்களுக்குச் செல்லும் பயணிகள் பல மணி நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.








# ஆபிரிக்க வானில் பிரகாசித்த மண்டேலா எனும் விடிவெள்ளி !

ஒரு கையில் ஆடு மேய்க்கும் குச்சி, இன்னொரு கையில் படிக்கும் பாடப்புத்தகம் என பள்ளிப்பருவத்தைக் கடந்தவனால், அவனது கல்லூரிப்பருவத்தை எளிதாகக் கடக்க முடியவில்லை. காரணம், புறச்சூழல் அவனுக்கு வேறொரு பாடத்தை, வலியக் கற்றுக்கொடுத்தது. அது நிறவெறிகொண்ட வெள்ளையர்களால், பூர்வகுடி கறுப்பின மக்களுக்கு நடத்தப்பட்ட 'அடிமைப் பாடம்'.

அணுத்துகள் ஒன்றுக்கு அவனது பெயரைச் சூட்டியிக்கிறார்கள்.

ஆனால் அவன் பௌதிக விஞ்ஞானி அல்லர். வெள்ளையரின் தலைநாடான பிரிட்டனின் தலைநகர் இலண்டனில் அவனுக்கை சிலை வைத்துள்ளனர். ஆனால் அவர் வெள்ளையர் அல்லர்-கறுப்பர்; வெள்ளை நிற வெறிக்குப் பரம வைரி.

## போராட்டமே வாழ்க்கை

எத்தனையோ பல்கலைகழகங்கள் அவருக்குச் சிறப்புப் பட்டங்களை வழங்கித் தம்மை சிறப்பித்துக் கொள்கின்றன, ஆனால் அவர் 'போராட்டமே என் வாழ்க்கை' என்று பறைசாற்றி விடுதலைப் போர் வீரர் என்ற நிகரிலாப் பட்டத்தை தமதாக்கிக் கொண்டவர்.

அந்த இளைஞனே 1939-ம் ஆண்டு, தனது 21-வது வயதில், அடிமைப்பட்டுக்கிடந்த தென்னாப்பிரிக்க இளைஞர்களிடம் விடுதலை உணர்வை விதைக்கிறான். அவர்களை அமைப்பாய் ஒன்று திரட்டுகிறான். 'கறுப்பின மக்களாகிய நாம் அடக்கப்படுகிறோம். நமக்கு வாக்களிக்கும் உரிமை மறுக்கப்படுகிறது. நாம் பயணம் செய்வதற்கு நம் நாட்டினுள்ளேயே அனுமதி பெற வேண்டியுள்ளது. நிலவுடமையாளர்களாக நம் கறுப்பின மக்கள் இருப்பது தடை செய்யப்பட்டுள்ளது. இவை சொந்த மக்களுக்கு எதிரானவை. நீதியற்றவை. இவற்றிற்கு எதிராக நாம் போராட வேண்டும் என போர்க்குரல் எழுப்புகிறான்.

உலகின் பல்வேறு நகரங்கள் அவருக்குச் சிறப்புக்குடியுரிமை வழங்கியுள்ளன, ஆனால் அவரது தாய்நாட்டில் எந்த உரிமையும் அவருக்கு இருக்கவில்லை !

உலகெங்கும் எத்தனையோ தெருக்களுக்கு அவரது பெயரைச் சூட்டியிருக்கிறார்கள். ஆனால் அவர் சுதந்திர மனிதராய்த் தென்னாபிரிக்கத் தெருவில் நடக்காது, சிறையில் கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக இருந்தார்.

அவர்தான் தென்னாபிரிக்க மக்களின் அன்புத் தலைவர் நெல்சன் மண்டேலா 27 ஆண்டுகளாய் (1989 வரை) சிறையில் கைதியாய் இருந்தார். தென் ஆபிரிக்க வெள்ளை நிறவெறி அரசு அவரை இவ்வளவு நீண்ட காலம் சிறையில் அடைத்து வைத்துப் புரிந்துள்ள சாதனை அது தான்.

நெல்சன் மண்டேலா என்பது தென்ஆபிரிக்க மக்களது தேசிய விடுதலைப் போராட்டத்தின் மறுபெயராகி விட்டது. அவரது மக்கள் அவருக்குச் சூட்டிள்ள அபிமானப் பெயர் சிறையிலும் வாடாத கறுப்புமலர். ஆண்டுகள் பல ஆன பின்பும் வாடாமற் போராட்ட மணம் வீசிக் கொண்டிருக்கும் ஒரு கறுப்புமலர், சிறையிலும் வாடாத கறுப்பு மலர்.



## மண்டேலாவின் உரிமைக்குரல் :

மண்டேலாவின் முழுப் பெயர் 'நெல்சன் ரோலி ஹாலா மண் டே லா' 1918 ஜூலை 18 இல் தென்ஆபிரிக்காவின் டிரான்ஸ்காய் பகுதியில் அம்தட்டா எனும் ஊரில் கோசா பழங்குடியினரின் தெம்பு அரச குடும்பத்தில் பிறந்தவர் இவர்.

முதல் உலகப்போர் முடிவுக்கு வந்த 1918-ம் ஆண்டில்,உலகிற்கு தனது அழுகுரலைப் பதிவு செய்தது ஒரு குழந்தை. பிறக்கும்போது எல்லாக் குழந்தைகளும் எழுப்பும் சாதாரண அழுகுரல் என்பதால் அது வியப்பதற்கில்லை. ஆனால், அந்த குரல்தான் பின்னாட்களில், தென்னாப்பிரிக்காவின் சரித்திரம் படைத்த உரிமைக்குரலாக ஓங்கி ஒலித்தது.

## ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்

தென்னாபிரிக்காவிற் கறுப்பின மக்களின் விடுதலைப் போராட்டம் நீண்ட நெடுங்காலமாக நடை பெற்றது.

கறுப்பின மக்களின் உரிமை அடக்கப்பட்டு அடிமைகளாக நடாத்தப்படும் மிகக் கேவல நிலையை நீக்கி 1912 ஜனவரி 8 இல் ஆபிரிக்க, தேசியக் காங் கிரஸ் உதித்தது (A.N.C) இதன் பயனாக கறுப்பின மக்களின் விடுதலைப் போராட்டம் உத்வேகமானது.

தென்னாப்பிரிக்காவின் பெரும்பான்மையான பூர்வகுடி கருப்பின மக்களை, பிரிட்டிஷ், பிரான்ஸ், டச்சு உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளிலிருந்து குடியேறிய சிறுபான்மை வெள்ளையர்கள் அடிமை செய்து ஆளத்தொடங்கினர்.

தென்னாப்பிரிக்காவின் கறுப்பின மக்கள், தங்கள் தாய்மண்ணிலேயே சொந்தமாக நிலம் வைத்துக்கொள்ள அனுமதி மறுக்கப்பட்டனர். ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டனர்.

மக்களின் விடுதலைக்காகப் போராட நினைக்கும் ஒரு போராளி, மக்களிடம் சென்று பணியாற்ற சரியான களம் ஒன்றை தேர்ந்தெடுப்பது மிகவும் அவசியம். நெல்சன் மண்டேலா, ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸை (African National Congress &ANC) தேர்ந்தெடுத்தார். 1942-ம் ஆண்டு அக்கட்சியில் தன்னை இணைத்துக்கொண்டார்.

இன மற்றும் நிற அடிப்படையில் பிரித்து, கறுப்பின மக்களைத் தனியாகக் குடியமர்த்தும் முயற்சியில் ஈடுபட்டது. அரசின் சட்ட முறையிலான அடக்குமுறையை எதிர்த்து, மண்டேலா தனது கல்லூரி நண்பரான ஒலிவர் ரம்போவுடன் இணைந்து 'ஆப்ரிகன் லீகல் பார்ட்னெர்ஷிப்' (African Legal Partnership) என்ற கறுப்பின மக்களுக்கான சட்ட அமைப்பை நிறுவினார். இதன் மூலம், அரசால் பாதிக்கப்பட்ட கறுப்பின மக்களுக்கு சட்ட ஆலோசனையும், உதவியையும் வழங்கினார். மறுபுறம் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் சார்பில் பல அறவழிப் போராட்டங்களையும் ஒருங்கிணைத்து, கட்சியை மக்கள் இயக்கமாக உருமாற்றிசனார்.

சுரண்டற்கார, நிறவெறித் தென்னாபிரிக்க அரசு ஆபிரிக்க தேசிய காங்கிரஸை அழிக்க முனைந்தது. ஆயினும் ஒரு சிலரைத்தான் கைது செய்ய முடிந்தது. மக்களின் அமைப்பு மக்களுடனேயே இருந்து போராடியது.

தொடக்கத்தில் அறப்போர் (வன்முறையற்ற) வழியில் நம்பிக்கை கொண்டிருந்த இவர், பிறகு ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸின் ராணுவப் பிரிவுக்கு தலைமை தாங்கினார். இவர்கள் மரபுசாரா கொரில்லாப் போர்முறைத் தாக்குதலை நிறவெறி அரசுக்கு எதிராக நடத்தினர். மண்டேலாவின் 27 ஆண்டு சிறைவாசம், நிறவெறிக் கொடுமையின் பரவலாக அறியப்பட்ட சாட்சியமாக விளங்குகிறது.

## மகத்தான மக்கள் தலைவன்

ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் முக்கிய தலைவராக விளங்கிய நெல்சன்மண்டேலா மக்கள் மத்தியிற் பிரபலமானார். எதிரிகள் கூட நெல்சன் மண்டேலாவை மதித்தனர். அன்பால் எதனையும் சாதிக்கக் கூடிய மகத்தான மக்கள் தலைவரானார் மண்டேலா.

நிறவெறி அரசு நெல்சன் மண்டேலாவை அழிப்பதால் கறுப்பின மக்களின் விடுதலைப் போராட்டத்தை அழிக்கலாம் என எண்ணியது. தேச விரோத வழக்கில் நெல்சன் மண் டேலாவை மாட்டிய அரசு குற்றவாளிக் கூண்டினுள் வைத்து விடுதலைப் போராட்டத்தைப் பேரம் பேசியது.

ஆயினும் சிறையின் பெரும்பாலான காலத்தை இவர் ராபன் தீவில் சிறிய சிறை அறையில் கழித்தார். இன ஒதுக்கல் அரசின் குற்றவாளிக் கூண்டினுள் நிறுத்தப்பட்டு 27 ஆண்டுகளாக இருட் டுச் சிறைக்குள்ளேயே தன் மக்களின் விடுதலைப் போராட்டத்தைத் தொடர்ந்து நடாத்தினார். நான் இன வெறியன் அல்லன்; இனவெறியை அடியோடு வெறுப்பவன்.



இனவெறி சுறுப்பரிடமிருந்தாலென்ன, வெள்ளையரிமிருந்தாலென்ன, அது அநாகரிகமானது. அருவருக்கத்தக்கது.

இத்தனையாண்டு சிறை வாசத்தின் பின்னரும் தன் சுயநலத்துக்காகத் தேச விடுதலைப் ிபோராட்டத்தை நெல்சன் மண்டேலா கைவிடவில்லை. எதற்கும் அஞ்சாத புரட்சிச் சிங்க மாய் நிறவெறி அரசை எதிர்த்தார், குற்றவாளிக் கூண்டினுள் நிறுத்தப்பட்ட நெல்சன் மண்டேலா அரசுக் கெதிராகப் போர்க்கணை தொடுத்தார்.

இனவெறியை முற்றுமுழுதாக எதிர்த்து நின்ற மண்டேலா இருட்குகையான சிறைக்குள் தள்ளப்பட்டார் விடுதலை... விடுதலை... என்ற பெயரில் பேரம் பேசும் நிற வெறியாளர்களுக்கு துளியேனும் மசியது தனது கையில் இலட்சியத்தில் உறுதியாக நின்றார். சிறையிலும் வாடாத கறுப்பு மலர் தனக்கு இழைக்கப்படும் கொடுமைகளை மறந்து மக்களுக்காக தான் போராடு வதையிட்டு மகிழ்ச்சியடைகிறது என அவர் இருட்டுச்சிறையினுள்ளே ஆற்றிய உரையிருந்து காணலாம். எனது காலம் திரும்பிவருமானால் இது வரை செய்ததையே மீண்டும் செய்வேன் தன்னை மனிதன் என்று அழைக்கிற எவனும் நிறவெறியருகெதிராகவே செயற்படுவான். எத்தனை நூற்றாண்டுகள் சென்றாலும், கறுப்பு மலர் விடுதலைப்போராட்ட மணம் வீசிக்கொண்டே இருக்கும்.

1990-ல் அவரது விடுதலைக்கு பிறகு அமைதியான முறையில் புதிய தென்னாப்பிரிக்கக் குடியரசு மலர்ந்தது. மண்டேலா, உலகில் அதிகம் மதிக்கப்படும் தலைவர்களில் ஒருவராக விளங்கினார். மண்டேலா, இனவெறி ஆட்சியில் ஊறிக்கிடந்த தென்னாபிரிக்காவை மக்களாட்சியின் மிளிர்வுக்கு இட்டுச் சென்றவர்.

மண்டேலா அந்த சூழ்நிலையில், மண்டேலாவை விடுதலை செய்ய வேண்டும் என நாடு முழுவதும் ஆண்டுக் கணக்கில் போராட்டங்கள் தொடர்ந்தன. உலக நாடுகளெல்லாம் மண்டேலாவின் விடுதலையை வலியுறுத்தியது. ஆனால் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் அரசும் காலம்தாழ்த்தி வந்தது.

தென்னாப்பிரிக்க அரசின் அலட்சியப் போக்கால், அதிருப்தியடைந்த சில உலக நாடுகள் அந்நாட்டின்மீது பொருளாதரத் தடை விதித்தது. உலக அரங்கில தனிமைப்படுத்தப்பட்ட நாடாக மாறியது. இப்படியான இக்கட்டான சூழலில், தென்னாப்பிரிக்காவில் ஆட்சி மாற்றம் நடைபெற்று, நெல்சன் மண்டேலாவின் விடுதலையும் நிறைவேறுகிறது. 1990-ம் ஆண்டு பிப்ரவரி 11-ம் நாள் தனது 27 ஆண்டு சிறைவாசத்தை முடித்துக் கொண்டு விடுதலையானார் மண்டேலா.

விடுதலையான நெல்சன் மண்டேலாவைத் தென்னாப்பிரிக்க மக்கள் மட்டுமல்லாமல், உலக நாடுகள் அனைத்தும் மகிழ்ச்சியோடு ஆரத்தழுவி வரவேற்றன. இந்தியா சார்பில் அப்போதைய பிரதமர் வி.பி. சிங் தலைமையில் வரவேற்புக்குழு அமைக்கப்பட்டது. அப்போது மக்கள் மத்தியில் பேசிய மண்டேலா, 'இனவெறி ஆட்சியைத் தனிமைப்படுத்த சர்வதேச சமுதாயம் தொடர்ந்து பிரசாரம் செய்ய வேண்டும். என்னுடைய விடுதலை மட்டும் பேச்சுவார்த்தைக்குத் தேவையான அடித்தளம் ஆகாது. நிற வேறுபாடு இல்லாமல் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்படும் அமைப்புதான் நம் நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்க வேண்டும். அரசியல் அதிகாரத்தின்மீது வெள்ளையர்களின் ஏகாதிபத்தியத்துக்கு முடிவு காண வேண்டும். கறுப்பர்களுக்குச் சம உரிமை கிடைக்கவேண்டும். அதுவரை போராடுவோம்.'என அதிரடியாகத் தெரிவித்தார். இது நெல்சன் மண்டேலாவின் உறுதித் தன்மையை மீண்டும் ஒருமுறை உலகுக்கு உணர்த்தியது. 1993-ம் ஆண்டு உலக அமைதிக்கான நோபல் பரிசு நெல்சன் மண்டேலாவுக்குக் கொடுக்கப்பட்டது.

தென்னாப்பிரிக்காவின் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் குடியரசுத் தலைவர் ஆவார். அதற்கு முன்னர் நிறவெறிக்கு எதிராகப் போராடிய முக்கிய தலைவர்களுள் ஒருவராக இருந்தார்.

அமைதிவழிப் போராளியாக, ஆயுதப் போராட்டத் தலைவனாக, தேசத்துரோகக் குற்றம் சுமத்தப்பட்ட குற்றவாளியாக, 27 ஆண்டுகள் சிறையில் வாடி பின்னர் விடுதலையாகி குடியரசு தலைவராக, அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவராக இவரின் அரசியல் பயணம் தொடர்ந்தது. சூன் 2008-ல் பொது வாழ்க்கையிலிருந்து விலகுவதாக அறிவித்தார்.

ஐங்கரன் விக்கினேஸ்வரா





# இனவாதத்தினை மக்கள் மத்தியில் விதைத்து எதிர் காலத்தில் அரசியலுக்குள் நுழைய முடியாது

## முன்னாள் பிரதியமைச்சர் சோமசுந்தரம் கணேசமூர்த்தி தெரிவித்தார்

**(இ.சுதாகரன்)**

மக்கள் சக்தியால் யாவற்றினையும் சாதித்து நாட்டினை நேர்மையான நெறிப்படுத்தலுக்கு கொண்டுவர முடியும் என்பதனை இலங்கை வாழ் மக்கள் நிருவித்துக் காட்டியிருக்கின்றமை ஊழல் புரிகின்ற அரசியல் வாதிகளுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமையப் பெற்றுள்ளது.

நாட்டினுடைய கடும் போக்கான அரசியல் நிலைப்பாடு தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே முன்னாள் பிரதியமைச்சரும் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பட்டிருப்புத் தொகுதி அமைப்பாளருமான சோமசுந்தரம் கணேசமூர்த்தி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் மக்களின் ஆதரவோடு ஆட்சியமைத்த அரசாங்கமானது மக்களை மறந்து தமது குடும்பத் தேவையினை நிறைவு செய்யும் வகையில் பெருமளவான சொத்துக்களை தம்வசப்படுத்தி மன்னிக்க முடியாத ஊழல் மோசடியினை மேற்கொண்டு இலங்கையில் வாழ்கின்ற அனைத்து மக்களையும் கடனாளிகள் வகுதிக்குள் சிறைப்பிடிக்க வைத்தமை இலங்கை வரலாற்றில் பொன் எழுத்துக்களினால் பொறிக்கப்பட வேண்டிய சாதனையாக இருக்கின்ற நிலையில் மக்கள் அரசாங்கத்திற்கு எதிராக இன மத மொழி வேறுபாடுகளுக்கு அப்பால் ஒன்றிணைந்து காலி முகத்திடலில் ஒன்று கூடிய அகிம்சை வழிப் போராட்டமானது துரிதகெதியில் அரச தலைவர் நாட்டினைவிட்டு விரட்டியடிக்கப்பட்டு அயல் நாடுகளில் தஞ்சமடைய முடியாத அளவிற்கு மாற்றமடைந்துள்ளமை இலங்கையினுடைய அரசியல் அமைப்பின் வரலாற்றுப்பதிவாகும்.

குடும்ப ஆட்சியினால் மக்கள் பல வருட காலமாக சொல்லொன்னா துயரங்களை அனுபவித்த நிலையில் சாத்வீகமான போராட்டாத்தின் ஊடாக ஆட்சியாளர்களை ஆசனத்திலிருந்து விறட்டியடித்திருக்கின்றனர். மக்களின் விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் மின்சாரத்தடை எரிபொருள்தட்டுப்பாடு உரத்தட்டுப்பாடு மருந்து வகைகளின் தட்டுப்பாடு உணவுப்பஞ்சம் போன்ற தேவைகளை நிறைவேற்ற முடியாத ஆட்சியாளர்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்கின்ற நல்லெண்ண அடிப்படையில் இனமத மொழிகளுக்கு அப்பால் ஒன்றிணைந்த இளைஞர், யுவதிகள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் தொழிற் சங்கங்கள் அரசாங்கத்திற்கு எதிராக சாத்வீக முறையில் போராட்டங்களை இடைவிடாது முன்னெடுத்து வெற்றி பெற்றிருக்கின்றனர். இவ்வாறான வெற்றியானது ஜனநாயகத்திற்கு கிடைக்கப் பெற்ற வெற்றியாகும்.

ஆட்சியாளர்களின் மிதமிஞ்சிய அடக்கு முறைக்கு எதிராக மக்கள் புரட்சியானது பரிணாமம் பெற்றமையினால் குடும்ப ஆட்சி முறைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது மாத்திரமல்லாது இலங்கை வரலாற்றில் அரச தலைவர் மக்கள் சக்தியால் துரத்தியடிக்கப்பட்டு உறவு நாடுகளில் தஞ்சமடையாத நிலைமையினை ஏற்படுத்தியது இது மக்கள் போராட்டத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ள மாபெரும் வெற்றியாகும்.

இலங்கைச் சரித்திரத்தில் இனவாதத்தினை மக்கள் மத்தியில் விதைத்து அரசியலுக்குள் நுழைய முடியாது. மக்கள் மத்தியில் மீள முடியாத பாரிய பொருளாதாரச் சுமையினை ஏற்படுத்தி வேடிக்கை பார்த்த அரசாங்காமானது மக்களின் சாத்வீகமான போராட்டத்தினால் இருந்த இடம் தெரியாத அளவிற்கு துரத்தியடிக்கப்பட்டிருக்கின்றனர். சஜித் பிரமதாச அவர்களை தலைவராகக் கொண்டு செயற்படுகின்ற ஐக்கிய மக்கள்சக்தியின் கொள்கை நெறி முறைகளும் இன வாத அடிப்படைக் கொள்கைகளை அகற்றி இன மத மொழி பேதங்களுக்கு அப்பால் இலங்கை வாழ் மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து பல்லின அரசியல் கொள்கையினை முன்னெடுப்பதில் கொள்கை ரீதியாக செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நாட்டினைப் பொறுப்பேற்பதில் இணக்கப்பாடு அடையாத நிலையில் எதிர் காலத்தில் நடைபெற இருக்கின்ற தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சக்தி வெற்றி வாகை சூடி ஆட்சியமைத்து மக்கள் நலன் விடயங்களை மேலோங்கச் செய்யும் என்றார்.

# வாழைச்சேனை இ.போ.சபை

## ஊழியர்கள் வீதி மறியல் போராட்டம்





**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

இலங்கை போக்குவரத்து சபை வாழைச்சேனை கிளை ஊழியர்கள் (16) போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

வாழைச் சேனை இ.போ.சபைக்கு முன்பாகவுள்ள பிரதான வீதியின் குறுக்கே பஸ் வண்டிகளை நிறுத்தி இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கடமையினை மேற்கொள்ள தூர இடங்களிலிருந்து டிப்போவுக்கு வரும் தமக்கு பெற்றோல் வழங்க வேண்டும் எனும் கோரிக்கையை முன் வைத்தே ஊழியர்கள் இந்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டம் நடைபெற்ற இடத்திற்கு வருகை தந்த வாழைச்சேனை பொலிஸாரும், இராணுவத்தினரும் போராட்டம் நடாத்திய ஊழியர்களிடம் பேச்சுவார்த்தையை மேற்கொண்டனர்.

அந்தவகையில், நாளை ஊழியர்களுக்கு பெற்றோல் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்ததற்கமைய ஊழியர்கள் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.

# முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவிற்கு எந்த நாடும் அகதி அடைக்கலம் கோடுக்க கூடாது

**(பாறுக் ஷிஹான்**

போர்க்குற்றவாளியான முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவிற்கு எந்த நாடும் அகதி அடைக்கலம் கொடுக்க கூடாது அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கம் தெரிவித்துள்ளது.

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (17) மாலை நடாத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு சங்க உறுப்பினர்கள் குறிப்பிட்டனர்.



மேலும் தங்களது கருத்தில் தெரிவித்ததாவது;

**அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்க தலைவி தம்பிராசா செல்வராணி**

இலங்கையில் இருந்து தப்பி ஓடிய ஜனாதிபதி கோத்தபாயவிற்கு எந்த நாடும் அகதி அந்தஸ்து கொடுத்து எந்த நாடும் வாழ்வதற்கு இடம்கொடுக்க வேண்டாம். மக்கள் போராட்டத்தின் ஊடாக ஜனாதிபதி வெளியேற்றப் பட்டதை நாம் வரவேற்கின்றோம். எமது உறவுகளை இந்த ஜனாதிபதி பிரதமரிடம் தான் கொடுத்துவிட்டு தொலைத்து விட்டுள்ளோம். இறுதி யுத்தத்தின் போது எமது உறவுகளை இவர்களிடம் தான் ஒப்படைத்திருந்தோம். எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை தான் அன்றிலிருந்து இன்று வரை கேட்டு இருக்கின்றோம். எமது உறவுகளை காணாமல் ஆக்கிய ராஜபக்ஸ குடும்பத்திற்கு எவரும் ஆதரவு அழிக்க வேண்டாம். இன்று எமது உறவுகளை காணாமல் ஆக்கிவிட்டு தற்போது அவர்களும் காணாமல் ஆக்கப்படும் நிலைமைக்கு தள்ளப் பட்டுள்ளார்கள். எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற கேள்விக்கு பதில் கிடைக்காமல் நாம் இருக்கின்றோம். என்றார்.

**அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்க உறுப்பினர் அழகேஸ்வரி**

நாங்கள் தற்போது 50 வீதம் ஆனந்தமாகவும் 50 வீதம் கவலையாகவும் தான் இருக்கின்றோம். ஏனெனில் 12 வருடங்கள் நாங்கள் போராடியமைக்கு எவ்வித பலனும் கிடைக்கவில்லை. ஆனாலும் கோட்டபாய துரத்தப்பட்டுள்ளதால் எமக்கு ஒரு சந்தோசம் உள்ளது. ஆனால் இனியும் அவர்கள் தான் வருவார்கள் என்ற சந்தேகமும் எமக்குள்ளது. இந்நிலையில் இனியும் எம்மால் போராட முடியாது. வயது சென்று கொண்டு இருக்கின்றது. எதிர்கால ஜனாதிபதி பிரதமர் ஆகியோர் எமது விடயத்தில் தலையிட்டு தீர்வினை பெற்று தர வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன்.

**அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்க ஆலோசகர் தாமோதரம் பிரதீபன்**

இந்த நாட்டின் ஜனாதிபதி பிரதமரின் சர்வதிகார போக்குடன் தமிழர்களின் பூர்விக இடங்களை அபகரிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தார்கள். இதற்காக செயலணி ஒன்றினை உருவாக்கி பல மோசடிகளை மேற்கொண்டிருந்தார்கள். இதன் விளைவாக அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் தொடக்கம் பெரிய நீலாவணை வரையிலான தமிழர்களின் பூர்வீக நிலங்கள் பறிக்கப்பட்டிருந்தன. வடகிழக்கிலும் இவ்வாறான நிலைமை தொடர்கின்றது. எனவே இந்த செயற்பாட்டிற்கு மூல காரணமான ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஸ மக்களின் போராட்டத்தினால் நாட்டை விட்டு விரட்டப்பட்டுள்ளார். இறுதியுத்த மனித உரிமை மீறல் செயற்பாட்டில் குற்றஞ்சாட்டப்பட்ட இவருக்கு எந்த நாடுகளும் அடைக்கலம் கொடுக்க கூடாது என்பதை கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

# சேனையூர் ஸ்ரீ கணேசா விளையாட்டுக் கழகம் வெற்றி





**(அ . அச்சுதன்)**

மூதூர் கிரிக்கட் வாரியம் நடாத்திய மூதூர் பிரதேசத்தில் காணப்படும் 22 அணிகள் உள்ளடங்கிய கூ20 தொடரின் இறுதிப் போட்டியில் சேனையூர் ஸ்ரீகணேசா விளையாட்டுக் கழகம் மற்றும் மூதூர் இலவன் பவர்ஸ் அணிகள் பல பரீட்சை இடம் பெற்றது.

இப்போட்டியின் இறுதியில் சேனையூர் ஸ்ரீகணேசா விளையாட்டுக் கழகம் 28 ஓட்டங்களால் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# சாதனையாளர்களையும் புலமையாளர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு





எருவில் கல்வி சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் சாதனையாளர்களையும் புலமையாளர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு இடம் பெற்றது

எருவில் கிராமத்தில் 2020, 2021 ஆம் ஆண்டுகளில் புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றி சித்தி பெற்று தகுதி பெற்ற 38 மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் கலாபூஷணம் வீர இராசமாணிக்கம் மற்றும் சமூக செயற்பாட்டாளரும் எருவில் உதயநிலா கலைக்கழகத்தின் ஸ்தாபகருமாகிய திரு சந்திரப்பிள்ளை ரகுபதி ஆசிரிய ஆலோசகர் அவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் எருவில் சிக்கன சேமிப்பு கடனுதவு கூட்டுறவு சங்க மண்டபத்தில் இடம்பெற்றது .

எஸ்டா அமைப்பின் ஸ்தாபக தலைவர் சமூக சேவகர் அ .வசீகரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பட்டிருப்பு கல்வி வலயத்தின் நிருவாக பிரிவுக்கு பொறுப்பான பிரதிக் கல்விப்பணிப்பாளர் செ .மகேந்திரகுமார் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தது டன் மட் /பட் /எருவில் கண்ணகி மகா வித்தியாலய அதிபர் சி .சத்தியநாதன் அமைப்பின் ஆலோசகர்களான தேசகீர்த்தி ச .பேரின்பநாயகம் மற்றும் க .விஜயசுந்தரம் செயலாளர் ஆசிரியர் ஜீவராஜ் பொருளாளர் ஆசிரியர் புஷ்பநாதன் உப தலைவர் ஆசிரியர் தருமசீலன் உறுப்பினர்களான ஆசிரியர் புவிராஜ் இ கஜேந்திரகுமார் பெற்றோர்கள் நலன்விரும்பிகள் கலந்து சிறப்பித்தனர்.

# சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நோக்கில் இடம்பெற்ற இளைஞர் யுவதிகளுக்கான சமூக ஒத்திசைவு மற்றும் நிலைத்தன்மை பயிற்சி பட்டறை





**(சம்மாந்துறை நிருபர் ஐ.எல்.எம் நாஸிம்)**

ஆசிய மன்றத்தின் அனுசரணையில் கப்சோ நிறுவனத்தினால் அமுல்படுத்தப் பட்டு வரும் இலங்கையில் சமூக ஒருமைப் பாட்டினை வலுப்படுத்தல்' எனும் தலைப்பில் சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நோக்குடன் அம்பாறை மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட மூவின இளைஞர் யுவதிகளுக்கான ஒரு நாள் பயிற்சி பட்டறை அண்மையில் காரைதீவு லேடி-லங்கா மண்டபத்தில் நடைபெற்றது.

கப்சோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஏ.ஜே காமில் இம்டாட் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வளவாளராக எம்.றசாட் கலந்து கொண்டு பல்வேறு குழுச் செயற்பாடுகளும், பங்குபற்றலுடன் கூடிய ஆளுமை விருத்தி தொடர்பான பயிற்சிகளும் இளைஞர்களுக்கு வழங்கப்பட்டது. மேலும் இந்நிகழ்வில் கப்சோ நிறுவனத்தின் கள உத்தியோகத்தர்களான இஸ்மத், சுமன், மற்றும் ஜப்ரான் ஆகியோரும் கலந்து கொண்டனர்.





# அடுத்து வரும் ஜனாதிபதி யார்?

நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட இலங்கை ஒரு அழகிய நாடாக சர்வதேச அரங்கில் காட்சியளித்தது எனினும் காலத்திற்கு காலம் அரசியல் கதிரையில் அமர்கின்றவர்களால் இலங்கையின் அழகு அழுக்காக மாறியுள்ளது

.இலங்கை ஒரு அபிவிருத்தி அடைந்து வரும் நாடாக கடந்த காலத்தில் இருந்தாலும் தற்போது உலகின் பண வீக்க வீதம் அதிகம் கொண்ட நாடுகளின் பட்டியலில் இரண்டாவது இடத்தை பிடித்துள்ளது.நாட்டில் ஒரு போதும் இல்லாது அந்நியச் செலாவணி வீதம் குறைவடைந்து, இறக்குமதி குறைவடைந்து, அத்தியாவசிய பொருட்கள் தொடக்கம் ஆடம்பர பொருட்கள் வரை விலை உயர்வடைந்து பொதுமக்கள் நடுத்தெருவில் வாழ்நாளை கழிக்கின்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். நாளுக்கு நாள் வரிசைகளில் உயிரிழக்கின்ற நிலையை காண்கின்றோம். மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டு அவர்களுடைய எதிர்காலம் நடுத்தெருவிற்கு வந்துள்ளது. நாடு நாளுக்கு நாள் அனைத்து துறையிலும் பின் தள்ளப்படும் போதும் தனக்கு என்ன ஆகப்போவது என்றவாறு அரசியல்வாதிகள் இருப்பதை காண முடிகின்றது. இதற்கெல்லாம் என்ன தீர்வு என்பது தான் ஒட்டுமொத்த மக்களுடைய இன்றைய கேள்வி.

மக்களின் உரிமைகளை வென்றெடுக்க மக்கள் அவதாரம் எடுத்ததை நாளுக்கு நாள் சூடு பிடித்த போராட்டங்கள் உணர்த்தியது. காலி முகத்திடலை மையமாக

**எதிர்வரும் 20 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இடைக்கால ஜனாதிபதி தேர்வு வாக்கெடுப்பு நடக்க இருக்கின்றது. இதில் யார் தெரிவாகின்றாரோ அவரே எதிர்வரும் 6 மாதங்களுக்கு ஜனாதிபதியாக இருப்பார். இந்த தேர்தலில் போட்டியிட ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, அனுர குமார மற்றும் டலஸ் ஆகியோருக்கிடையில் கடும் போட்டி நிலவுகிறது. யார் அடுத்த ஆறு மாத கால ஜனாதிபதி என்பதை எதிர்வரும் 20 ஆம் திகதி இடம்பெறவுள்ள தேர்தல் தீர்மானிக்கும்.**

வைத்து உருவாகிய ‘கோட்டா கோ கம’ போராட்டக் களம் இலங்கையின் சமூக அரசியல் வரலாற்றில் மிக முக்கியமான திருப்பு முனையாக அமைந்தது.இதன் 100 நாள் நிறைவு ஞாயிற்றுக்கிழமை (17) கொண்டாடப்பட்டது. இலங்கை வரலாற்றில் இவ்வாறான ஒரு மக்கள் எழுச்சி போராட்டம் இடம்பெற்றதாக சரித்திரத்தில் இல்லை. இந்த மக்கள் உரிமைப் போராட்டம்



இலங்கையின் அரசியல் கட்டமைப்பில் பாரிய மாற்றத்தை எதிர்காலத்தில் கொண்டு வரும் என்பது தெளிவானது.

நாட்டின் பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு ஆளுகை கட்டமைப்பில் ஏற்பட்ட தொடர்க் குறைபாடுகளும், பலவீனமான அரசியல் தலைவர்களுமே காரணமென மக்கள் தொடர்ந்து கூறி வருகின்றனர் .இதுவரை காலமும் கோட்பாடு ரீதியாக இருந்த ஜனநாயகம் இன்று புதிய பாதையை நோக்கி நகர்கின்றது. போராட்ட களத்தின் நடைமுறைகள், ஒழுங்கு விதிகள், ஒழுக்கம் பண்பாடு ,பரஸ்பர மரியாதை, பன்மைத்துவம், பெண்ணுரிமை, மதசகிப்புத்தன்மை போன்ற அனைத்து காரணிகளோடு இனவாதம் அற்ற இலங்கையை ஜனநாயகத்தோடு நோக்குவதற்குமான ஒரு பரந்த வாய்ப்பினை அளித்துள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் ஜனநாயகத்தின் மீதும் இலங்கை சிறுபான்மை மக்கள் மீதும் பாரிய அளவிலான இன்னல்களை செய்தார் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. இதனை அரசியல் ஆய்வாளர்களும், முழு சர்வதேசமும் அவதானித்ததோடு எதிர்ப்பை தெரிவித்தனர். இதனாலே இன்று நாடு படுகுழியில் விழுந்துள்ள நிலையில் எந்த ஒரு சர்வதேச நாடுகளும் உதவிக்கு முன்வருவதில்லை. பதவியேற்ற உடனே நாட்டில் உள்ள பெரும்பான்மையை வைத்து சிறுபான்மையினரை அழிக்க பல்வேறு திட்டங்களை போட்ட ஜனாதிபதியாக கோட்டா இருக்கின்றார் .இதனாலே அன்று அவருக்கு ஆதரவு வழங்கிய 69 இலட்சம் மக்களினாலேயே கோ கோட்ட என துரத்தி அடிக்கப்படுகின்றார். இலங்கையின் அரசியல் வரலாற்றில் பதவிக்கு வந்து 23 மாதங்களில் மக்களின் எதிர்ப்பை சம்பாதித்து கொண்ட ஒரே ஜனாதிபதியாக கோத்தபய ராஜபக்ஷ பதிவாகியுள்ளார்.

இவரை பதவிக்கு கொண்டுவர பெரும்பான்மை சிங்கள மக்களும், பௌத்தப்பிக்குகளும் பிரதானமானவர்களாக இருந்தார்கள். இந்த நாட்டில் ஏற்பட்ட அனைத்து பிரச்சனைகளுக்கும் முஸ்லிம்களும் ,தமிழ் மக்களும் மாத்திரமே காரணம் எனவும் இந்த நாட்டை சிறுபான்மையினரின் ஆதிக்கத்திலிருந்து கட்டுப்படுத்த தூய பௌத்த இனத்தை சேர்ந்த ஒருவரை தலைவராக வரவேண்டும் என கோட்டாபயவை தேர்வு செய்தனர். கடந்த 30 வருட கால யுத்தத்தை வெற்றி கொண்ட ஒரே காரணத்தை வைத்து பெரும்பான்மை மக்கள் இவரை வாக்கிட்டு தெரிவு செய்தனர். பெரும்பான்மை இனத்தை சேர்ந்த எத்தனையோ பேரை இந்த கோட்டா பாதுகாப்பு அமைச்சராக இருந்த வேலையில் கொலை செய்ததற்கு ஆதாரங்கள் உண்டு எனினும் மீண்டும் இவரையே பெரும்பான்மை மக்கள் ஆதரித்தார்கள்.

இலங்கை சுமார் 90 ஆண்டுகளாக பிரதிநிதித்துவ ஜனநாயகத்தினை அனுபவித்து வந்தாலும் இடையில் இனவாதம் காற்றோடு காற்றாக பரவியதால் மக்கள் இன்னும் ஜனநாயகத்தின் பெருமதியினை சரியாக உணரவில்லை என்பதே உண்மை. தற்போது நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு பல்வேறு காரணங்கள் இருந்தாலும் ராஜபக்ச குடும்ப ஆட்சியை ஆதரித்த பெரும்பான்மை மக்கள் மிக முக்கிய காரணமாக இருக்கின்றார்கள். எனவே இந்த பாரிய நெருக்கடிக்கு ராஜபக்ஷ குடும்பத்தினரும் அவர்களை ஆதரித்த பெரும்பான்மை சமூகமுமே பிரதான காரணம் என்பது தெட்டத் தெளிவானது.

தொடர் போராட்டங்களில் படித்த மத்திய தர வகுப்பு, நகர்ப்புற இளைஞர், யுவதிகள், கிராமிய இளைஞர், யுதிகள், விவசாயிகள் தொழில் வல்லுனர்கள், ஆசிரியர் சமூகம், தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புகள், அரச அதிகாரிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், சிறுபான்மையினர் என அனைவரும் பங்கெடுத்து வருவதை காண முடிகின்றது.



அப்ரா அன்ஸார்

‘‘போராட்டங்களில் மக்களின் குரல் மழுங்கடிக்கப்படுகின்ற பொழுது அல்லது அலட்சியம் செய்யப்படுகின்ற பொழுது எழுச்சி பெறுகின்றது என மாட்டின் லூதர் கிங் தெரிவித்துள்ள கூற்றை இங்கு நினைவுபடுத்துவது பொருத்தமாகும் என நினைக்கிறேன்.

தான் தோற்றுப் போன ஜனாதிபதியாக வெளியேற மாட்டேன் என கோத்தா தெரிவித்திருந்தார். எனினும் நாட்டின் நிர்வாக செயல் திறன் பற்றி எந்த விதமான அக்கறையும் இல்லாமல் ராஜபக்ஷ குடும்பத்துக்கு என்ன என்ன செய்ய முடியுமோ அதை எல்லாம் செய்து முடித்தார். உயர்ந்த பதவிகளை ராஜபக்ஷர்களுக்கு வழங்கினார். 19 வது திருத்தம் இல்லாது ஒழிக்கப்பட்டு இருபதாவதை கொண்டு வந்தார். சர்வதேச கொள்கை பற்றிய ஒரு தெளிவான கொள்கையற்ற ஆட்சியாக கோட்டாவின் ஆட்சி அமைந்துள்ளது. இந்தியாவும் ,சீனாவும் தன்னுடன் கைகோர்த்து இருக்கும் வரை தமக்கு தோல்வி இல்லை என ராஜபக்சர்கள் கனவு கண்டிருந்தனர். தேரர்களின் ஆலோசனைகளை நம்பி மோசம் போனார்கள். தன்னைப் போன்ற வேறு எந்த ஆட்சியாளனும் இலங்கையை ஆட்சி செய்ய முடியாது என்ற தலைக்கனத்துடன் பதவியேற்று தன்னைப் போன்று வேறு எந்த ஆட்சியாளனும் இந்த நாட்டை அழித்திருக்க முடியாது என்ற நிலைக்கு நாட்டை தள்ளியுள்ளார். இவ்வாறான இனவாத கொள்கையே கோத்தாவின் ஆட்சி தோற்றுப் போக காரணமாக அமைந்தது என்பது கசப்பான உண்மை. இனி ராஜபக்சர்கள் இந்த அரசியலுக்கும் வேண்டாம் ,நாட்டுக்கும் வேண்டாம் என்ற நிலையில் மக்கள் அவர்களுக்கு எதிராக களம் இறங்கியுள்ளனர். தான் பற்றவைத்து குளிர் காய்ந்த நெருப்பே தனக்கு எதிராக எரிவதையும் அதில் கொஞ்சம் கொஞ்சமாக தாங்கள் அழிந்தததை இந்த ராஜபக்சரகள் தற்போது புரிந்து கொண்டனர்.

ஒரு ஜனநாயக அரசியல் முறைமையில் எதிர்க்கட்சி என்பது இன்றியமையாத ஒன்று. எதிர்க்கட்சி என்பது சில சமயங்களில் மாற்று அரசாங்கம் என்றும் அழைக்கப்படுகிறது. அதாவது எந்த ஒரு சமயத்திலும் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நாட்டை நிர்வகிக்கும் தயார் நிலையில், நிழல் அரசாங்கம் ஒன்றை கொண்டிருக்க வேண்டும். அப்போது தான் நாட்டில் ஜனநாயகம் தழைக்கும்.

எதிர்க்கட்சியின் பிரதான பொறுப்புகளில் ஒன்று அரசின் தவறான கொள்கை மற்றும் செயற்பாடுகளை சுட்டிக்காட்டி, நாட்டை சீரான வழியில் இட்டுச் செல்வதற்கான ஆலோசனைகளை முன்வைக்க வேண்டும். அரசு மேற்கொள்ளும் அத்தனை முயற்சிகளையும் எதிர்த்து, எவ்வாறாயினும், எவ்வழியிலேனும் ஆட்சியை கைப்பற்றியே ஆக வேண்டும் என்ற மனநிலை, எதிர்க்கட்சியின் வீழ்ச்சிக்கே வழிவகுக்கும்; மக்கள் மத்தியில் செல்வாக்கையும் இழந்துவிடும்.

ஓர் அரசாங்கத்திற்கு எவ்வாறு பொறுப்புணர்ச்சி மற்றும் பொறுப்புக்கூறல் உள்ளனவோ அதேபோல் எதிர்க்கட்சிக்கும் உண்டு என்பது நினைவில் கொள்ளப்பட வேண்டும். வெளிப்படைத்தன்மை மிக மிக அவசியம்.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், நாட்டில் எதிர்க்கட்சி என்று ஒன்றுள்ளதா என்று நினைக்க தோன்றுகிறது. நேற்று எதிர்க்கட்சியில் இருந்தவன், பதவிக்காக, இன்று அரசுடன் இணைந்து கொள்கிறான். ஜனநாயகத்தில் இது அனுமதிக்கப்பட்டதே என்றாலும், நம்பி வாக்களித்த மக்களின் விருப்புக்கு எதிராக செயல்படுகின்றனர் என்பது தெளிவு.

இலங்கையை பொருத்தமட்டில், ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி ஆகியவற்றுக்கு இடையே கொள்கை வித்தியாசத்தை காண்பது அரிது. ஒவ்வொரு தேர்தலிலும் முகங்கள் மாறுகின்றனவே அன்றி சிஸ்டம் மாறுவதுகிடையாது.

சுதந்திர இலங்கையில் உண்மையிலேயே ஒரு பாரிய பொருளாதார முறைமை மாற்றம் ஏற்பட்டது என்றால் அது 1978 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கை எனலாம். இதனை கடுமையாக எதிர்த்த அன்றைய எதிர்க்கட்சி, அதன் பின் பல முறை ஆட்சியை கைப்பற்றி, நாட்டின் இன்றைய பொருளாதார வீழ்ச்சிக்கு அந்த திறந்த பொருளாதாரக் கொள்கையே காரணம் என்று தொடர்ந்தும் குற்றம்சாட்டிய போதிலும், அந்த முறைமையை மாற்றுவதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை. இன்றளவிலும் அதே பொருளாதார சிஸ்டம் தான் நடைமுறையில் உள்ளது.

இதிலிருந்து தெரிவது என்னவென்றால், எதோ இருக்க வேண்டும் என்பதற்காக ஒரு எதிர்க்கட்சி உள்ளதே அன்றி, உண்மையில் அவ்வாறான ஒன்று இல்லை என்பதே யதார்த்தம்.

இன்றைய போராட்டங்கள் பல முக்கியமான விடயங்களை வெளிப்படுத்தி நிற்கின்றன. அந்தவகையில், மரபு ரீதியான அரசியல் தலைமைத்துவம் மீதான அவநம்பிக்கை, பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான அதிருப்தி, ஊழல் மோசடிகள் நிறைந்த அரசியல் கலாசாரம் மீதான விரக்தி போன்ற பல விடயங்களை அவதானிக்க முடியும். இன்று அரசியல்வாதிகள் மாத்திரமல்ல, அரசியல் கட்சிகளும் முற்றாகவே நம்பிக்கையை இழந்துள்ளன.

ஆகவேதான் 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் வீடு செல்ல வேண்டும் என்ற கோ கோம் கோட்டா எழுச்சி பெற்றதோடு தற்போது கோ கோம் ரணில் என்ற கோஷம் எழுந்துள்ளது. அரசாட்சியில் பொது மக்களின் நம்பிக்கை என்பது அடிப்படையானதாகும்.

மக்களின் ஒரே கோரிக்கை இந்த கொடுங்கோல் ஆட்சியாளர்களான ராஜபக்ஷ குடும்பம் ஆட்சியை விட்டு வெளியேறி செல்ல வேண்டும் என்பது தான் அந்தவகையில் பல எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் கோட்டாபய தனது ராஜினாமா கடிதத்தை கையளித்தார். இது மக்கள் தொடர் போராட்டங்களின் மூலம் கிடைத்த வெற்றி என்பதை உணர்த்துகின்றது.கடந்த மே 9 ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷ குழுவினரால் போராட்டக்காரர்கள் கடுமையாக தாக்கப்பட்டு நாட்டின் அனைத்து பகுதியிலும் கலவரம் வெடித்தது நாம் அறிவோம்.அதன் பின்னர் பிரதமர் பதவியை மஹிந்த மற்றும் நிதி அமைச்சர் பதவியை பெசில் ராஜபக்ஷ உட்பட துறந்தனர்.எனினும் கோட்டா வெளியேறு என்பதே மக்களின் கோஷம் எனவே கடந்த 9 ஆம் திகதி திரண்ட மக்கள் நாட்டில் பாரிய அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர்.மக்களின் தியாக போராட்டத்திற்கு பாரிய வெற்றி கிடைத்துள்ளது.கடந்த சனிக்கிழமை ஜனாதிபதி மாளிகை கைப்பற்றப்பட்டதுடன், போராட்டக்காரர்களினால் பல்வேறு நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டது.அதில் குறிப்பாக ஜனாதிபதி கோட்டாபய பதவி விலக வேண்டும் என்பதே பிரதானமானது.சனிக்கிழமை மாலை இடம்பெற்ற கட்சி கலந்துரையாடலில் தான் 13 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக பதவியை துறப்பாக ஜனாதிபதி அறிவித்து பின்னர் உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தார்.இலங்கையிலிருந்து மாவைதீவுக்கு தப்பியோடினர் அங்கு பலத்த எதிர்ப்பை தொடர்ந்து சிங்கப்பூரில் தஞ்சம் அடைந்துள்ளார்.எனினும் அங்கும் அவருக்கு எதிர்ப்பு கோஷங்கள் எழுப்பி வருகின்றனர். இது இவ்வாறு இருக்க தற்போது பதில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க கடமையாற்றி வருகின்றார்.

எதிர்வரும் 20 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இடைக்கால ஜனாதிபதி தேர்வு வாக்கெடுப்பு நடக்க இருக்கின்றது.இதில் யார் தெரிவாகின்றாரோ அவரே எதிர்வரும் 6 மாதங்களுக்கு ஜனாதிபதியாக இருப்பார். இந்த தேர்தலில் போட்டியிட ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ,அனுர குமார மற்றும் டலஸ் ஆகியோருக்கிடையில் கடும் போட்டி நிலவுகிறது.யார் அடுத்த ஆறு மாத கால ஜனாதிபதி என்பதை எதிர்வரும் 20 ஆம் திகதி இடம்பெறவுள்ள தேர்தல் தீர்மானிக்கும்.

இலங்கை 1947 இற்கு பின்னர் இரண்டாவது முறையாக சுதந்திரம் அடைந்துள்ளதாக பொதுமக்கள் கருதுகின்றனர்.இந்த பாரிய மாற்றம் எதிர்கால அரசியலில் எவ்வாறான மாற்றங்களை கொண்டு வரும் என்பது அனைவரினது எதிர்பார்ப்பாக உள்ளது.இன,மத,கட்சி ,பேதங்கள் இன்றி நாட்டின் எதிர்காலத்திற்காக போராடினால் நிச்சயம் வெற்றி இருக்கும் என்பதை இந்த மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் உணர்த்தும் பாடமாக உள்ளது.

மக்களின் ஒரே கோரிக்கை அவர்களுடைய அன்றாட வாழ்க்கையின் நிம்மதி இந்த நாட்டில் நிலை நாட்டப்பட வேண்டும் என.அதற்காகவே அவர்கள் தொடர்ந்து போராடுகிறார்கள்.எதிர்கால அரசியல் மாற்றம் எவ்வாறு அமையும் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

# தமிழ் மக்களும் ஆட்சி மாற்றமும்

நாட்டின் தற்போதைய நிலவரம் தொடர்பில் உள்நாட்டு வெளிநாட்டு ஊடகங்களுக்கு 15.06.2022 அன்று வழங்கிய செவ்வியில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நாட்டின் தற்போதைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவேண்டுமாயின் ஆட்சி மாற்றமேற்பட வேண்டுமென வலியுறுத்தியிருந்தார்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை சுதந்திர இலங்கையில் கடந்த 74 வருடங்களாக ஏற்பட்ட ஆட்சி மாற்றங்கள் யாவும் தலைவலிக்கு மருந்து தலையணையை மாற்றிய விடயமாக நடந்துள்ளதே தவிர தலைவலி தீரவில்லை.

இன்று இலங்கைத் தமிழர்களுக்கு-இலங்கையின் வடக்குக் கிழக்குத் தமிழர்களுக்குக் குறைந்தபட்சமாவது சமூக பொருளாதார அரசியல் பாதுகாப்பை வழங்கிக் கொண்டிருப்பது 13 வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தமே. இது ஆட்சி மாற்றங்களினால் ஏற்பட்டதொன்றல்ல. இந்தியத் தலையீட்டினால் ஏற்பட்டதொன்றாகும். அதற்கான புறச் சூழலைத் தமிழ் மக்களின் அஹிம்சைப் போராட்டமும் ஆயுதப் போராட்டமும் அவற்றின் சரி-பிழைகளுக்கு அப்பால் பலம்-பலவீனங்களுக்கப்பால் ஏற்படுத்தித் தந்தது. இந்த யதார்த்தத்தைத் தமிழர்கள் மறந்துவிடக் கூடாது.

ஆனால், இன்று இலங்கையில் எதிர்வு கூறப்படும் அல்லது ஏற்பட்டிருக்கும் ஆட்சி மாற்றம் பிறிதொரு பரிமாணத்தையுடையது. நாட்டிலே ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி அதன் பக்க விளைவாக அரசியல் நெருக்கடிகளையும் உருவாக்கி உடனடி ஆட்சி மாற்றத்தையும் வேண்டி நின்றது.

இதன் அடிப்படையில் 09.04.2022 இல் காலி முகத்திடலில் ஆரம்பித்த போராட்டம்



பல படிகளைத் தாண்டி 09.07.2022 அன்று உக்கிரமடைந்து இறுதியில், ''இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்சே ஆகிய நான் இலங்கைக்கு வெளியே இருப்பதன் காரணமாக ஜனாதிபதி பதவிக்குரிய தத்துவங்கள் கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் இயலாது என கருதுவதனால் நான் இலங்கைக்கு வெளியே இருக்கும் கால எல்லைக்குள் ஜனாதிபதி பதவியின் தத்துவங்கள் கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதற்கும் புரிவதற்குமாக இலங்கை ஜனநாயக குடியரசு அரசியல் அமைப்பின் 37 (01) ஆம் உறுப்புரையின் கீழ் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பிரதம அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை 2022 ஜூலை மாதம் 13ஆம் தேதியில் இருந்து ஐக் நடைமுறைக்கு வருமாறு இத்தால் நியமிக்கின்றேன்''என்ற வர்த்தமானி அறிவித்தலில் வந்து தரித்து இறுதியாக கோட்டபய ராஜபக்சே தனது ஜனாதிபதி பதவி விலகல் (14.072022) கடிதத்தைச் சிங்கப்பூரில் உள்ள இலங்கை தூதரகம் மூலம் சபாநாயகருக்கு அனுப்பி அது சபாநாயகரால் உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அரசியலமைப்பு விதிகளின் படி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 15.07.2022 அன்று பதில் ஜனாதிபதியாக பிரதம நீதியரசர் ஜெயந்த ஜெயசூரிய முன்னிலையில் பதவிப் பிரமாணமும் செய்துகொண்டார். ஜனாதிபதிப் பதவியின் மீதிக் காலத்துக்குரிய நிரந்தர-புதிய ஜனாதிபதியைப் பாராளுமன்ற உறுப்பினர்களிடையேயிருந்து தேர்ந்தெடுக்கும் பொறுப்பு பாராளுமன்றத்தின் தலையில் வந்து விழுந்திருக்கிறது.

ஆட்சி மாற்றம் எவ்வாறு அடுத்த கட்டத்திற்கு நகர போகிறது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஆர்ப்பாட்டக்காரர்கள் எதனைச் சொன்னாலும் யாவும் தற்போது



**சம்பந்தனும் தனது வழமையான தன்னலம்– தலைக்கனம்– தன்முனைப்பு என்பவற்றை இத்தருணத்திலாவது களைந்து தமிழ் அரசியல் பொது வெளியில் இயங்கிக் கொண்டிருக்கும் சகல தமிழ் அரசியற் சக்திகளையும் (அதிகாரப் பகிர்வு இயக்கம் உட்பட) அணைத்துக் கொண்டு அரசியல் நகர்வுகளை மேற்கொள்வாரேயானால் தமிழ் மக்களுக்கு அது மிகுந்த பலனளிக்கும்.**



நடைமுறையிலுள்ள அரசியலமைப்பு விதிகளின் படியே நடைபெறும். எதிர்க்கட்சிகளின் கோரிக்கையாக உள்ள சர்வ கட்சி அரசாங்கம் எவ்வாறு என்ன வடிவத்தில் அமையும் என்பதும் தெளிவாகத் தெரியவில்லை. அதனையும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஜனாதிபதி கோட்டபய பதவி விலகிய பின்னரும் கூடப் பாராளுமன்றத்தில் பொது ஜனப் பெரமுனைக் கட்சியினருக்கே பெரும்பான்மை நிலவுகிறது என்பதால் பொது ஜனப் பெரமுனைக் கட்சியினர் ஆதரிக்கும் ஒருவரே



புதிய ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் அதனைத் தொடர்ந்து அப்புதிய ஜனாதிபதியால் நியமிக்கப்படப்போகும் பிரதமரும் பொது ஜனப் பெரமுனைக் கட்சியினர் ஆதரிக்கும் ஒருவராக இருப்பதற்குமே சாத்தியமுண்டு. சர்வ கட்சி அரசாங்கம் அமைவது தற்போதைய நிலையில் கேள்விக் குறியாகவே உள்ளது.

ஆனால், எந்த ஆட்சி மாற்றமும் பொருளாதார நெருக்கடிக்கு எப்படி? எத்தகைய? தீர்வைக் காண போகிறது என்பது 'மில்லியன் டாலர்' கேள்வி.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்த ஆட்சி மாற்றத்தையும்-ஆட்சி மாற்றம் நிகழும் நிலைமாறுகாலத்தையும் (Transitional Period) தமிழ் மக்களின் சமூக பொருளாதார அரசியல் நலன்களைத் தக்கவைத்து எப்படி முன் கொண்டு செல்லும் வகையில் எப்படி அரசியல் தந்திரோபாயத்துடன் கையாள வேண்டுமென்பதே அக்கறைக்குரியதாகும்.

இந்த அக்கறை தமிழர் தரப்பு அரசியல் சக்திகளிடம் குறிப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமும் அதன் தலைவர் இரா. சம்பந்தனுக்கும் இருக்கிறதா? என்பதே தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினையாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் /தமிழ்க் கட்சிகளின் கூட்டங்களில் கலந்து கொள்வதை விட அதிகமாக ஐக்கிய மக்கள் சக்தி கூட்டங்களிலும் ஆர்ப்பாட்டக்காரர்களுடனான சந்திப்புகளிலுமே அதிகமாகக் கலந்து கொள்கிறார். இது தமிழர்களுக்கு ஆபத்தானது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? கூட வந்த குரங்குதான் ஆண்டால் என்ன? கோட்டபய பதவி விலகினால் மட்டும் போதும் என்றில்லாமல் மீதிக்கால (இடைக்கால) ஜனாதிபதியாக வருபவர் தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வுக் கோட்பாட்டை அனுசரித்துப் போகிறவராகவும்-கைவசம் இருக்கின்ற பதிமூன்றாவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தை முழுமையாகவும் முறையாகவும் அமுல் செய்வதில் அரசியல் விருப்புக் கொண்டவராகவும்-இந்த விடயத்தில் இந்தியாவை அனுசரித்துப் போகிறவராகவும் இருப்பதே தமிழ் மக்களுக்குச் சாதகமானது என்பதைக் கருத்திலெடுத்துச் செயற்பட வேண்டும். இதற்கான இராஜதந்திர நகர்வுகளை இப்போதிருந்தே மேற்கொள்ளுமாறு தமிழ் மக்களிடையேயுள்ள கல்விமான்களும், துறைசார் நிபுணர்களும், அரசியலாளர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு அழுத்தமும்-ஆலோசனைகளும்-அனுசரணையும் வழங்க வேண்டியது அவசியம். அப்போதுதான் உத்தேச ஆட்சி மாற்றத்தினால் தமிழ் மக்களுக்கு ஏதும் ஆகும்.

அவர் வேண்டாம் இவர் வேண்டாம் என்று சுமந்திரன் மற்றும் சாணக்கியன் போன்று கும்பலிலே கோவிந்தாப் போடும் முட்டாள்த்தனமான செயற்பாடுகளைத் தமிழர் தரப்பு கைவிட வேண்டும்.

இரா. சம்பந்தனும் தனது வழமையான தன்னலம்-தலைக்கனம்-தன்முனைப்பு என்பவற்றை இத்தருணத்திலாவது களைந்து தமிழ் அரசியல் பொது வெளியில் இயங்கிக் கொண்டிருக்கும் சகல தமிழ் அரசியற் சக்திகளையும் (அதிகாரப் பகிர்வு இயக்கம் உட்பட) அணைத்துக் கொண்டு அரசியல் நகர்வுகளை மேற்கொள்வாரேயானால் தமிழ் மக்களுக்கு அது மிகுந்த பலனளிக்கும்.

இது விடயத்தில் அதிகாரப் பகிர்வு இயக்கம்



தயாரித்துள்ள 'அரசியலமைப்பின் 13 வது அரசியல் திருத்தத்தை முழுமையாக அமுல் செய்வதற்கான வழிகாட்டி' (A GUIDE FOR FULL IMPLEMENTATION OF THE 13TH AMENDMENT) எனும் தலைப்பிலான ஆங்கில மொழி மூல ஆவணம் சிறந்த வழிகாட்டியாகும்.

தடைகளையெல்லாம் தாண்டி சர்வகட்சி அரசாங்கம் அமையுமானால், இந்த ஆவணத்தின் உள்ளடக்கத்தை அமுல் செய்வதை நிபந்தனையாக விதித்து அதற்குக் காலக்கெடுவும் கொடுத்து உத்தேச சர்வ கட்சி அரசாங்கத்தில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல தமிழ் அரசியல் கட்சிகளும் பங்காளர்களாக இணைந்து கொள்ள முன்வர வேண்டுமென்று இப்பத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளையும் வேண்டிக் கொள்கிறது.

**தம்பியப்பா கோபாலகிருஷ்ணன்**

# ஆடிய ஆட்டம் என்ன?; ஓடிய ஓட்டம் என்ன?

# கோத்தாவின் எழுச்சியும் வீழ்ச்சியும்

**(இறுதி யுத்தத்தின்போது பதுங்கு குழிகளுக்குள்ளாவது பதுங்கி மக்கள் உயிரைப் பாதுகாத்துக்கொள்ள அனுமதிக்காத கோத்தா இன்று பதுங்கி மறைய இடமில்லாமல் பரிதவிக்கின்றார்)**



விடுதலைப்புலிகளுக்கு எதிரானதும் மக்கள் மீட்புக்குமான யுத்தம் என்ற போர்வையில் இலட்சக்கணக்கான தமிழர்களை வகை தொகையில்லாமல் இனவழிப்புச் செய்த யுத்தம் 2009 மே மாதம்,18 ஆம் திகதி மௌனமானது.அன்றைய ஜனாதிபதி மகிந்த சிங்களர் மத்தியில் ஹீரோவானார்.கோத்தா போரை வென்ற யுத்தத்தின் வீரத்தலைவர் என்ற சிங்களப் பார்வையில் யுத்த ஹீரோ ஆக்கப்பட்டார்.

'கோத்தாவின் போர்' (Gotta war) என்ற புத்தகத்தையும் கோத்தா எழுதுவித்தமை ஊடாக போருக்கான உரிமத்தை கோத்தாவே எடுத்துக் கொண்டார.அந்த மாய விம்பத்துடன் கோத்தா 2019 ஜனாதிபதித் தேர்தலில் குதித்தார். சிங்கள மக்களின் அபரிமிதமான வாக்குகளால் அவர் ஜனாதிபதி ஆனார்.ஆனால் இந்த ஜனாதிபதியை தேர்தலில் 85 வீதத்திலும் அதிகமான தமிழ்மக்கள் நிராகரித்துவிட்டனர்.

அநுராதபுரத்தில் ருவான்வெலிசாயவில் ஜனாதிபதியாகப் பதவிப்பிரமாணம் செய்யும்போதே தனது செருக்கை கோத்தா வெளிப்படுத்தினார். தான் சிங்கள மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி என இனவாதக் கொக்கரிப்பை ஆரம்பித்தார்.துட்டகைமுனுவின் அவதாரபுருசராக தனது எழுச்சியைச் சிங்கள மக்கள் மத்தியில் காட்டினார்.பல்லினமக்களின் தலைவர் என்பதைப் பக்குவமாகச் சொல்லமறுத்தார்.கொரோனாவின் தாக்கம் இவருக்குத் தடைகளைப்போட்டாலும் அவரது இனவக்கிர ஆட்டம் குறையவில்லை.

கொரோனா ஒருபுறம் மக்களை வதைத்துக் கொண்டிருக்க,

பௌத்த குருமார்கள்,ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளை மட்டும் கொண்ட தொல்லியல் ஆணைக்குழுவை நியமித்து தமிழ்மக்களின் கலாசார காணிகளையும் மதவழி பாட்டு இடங்களையும் ஆக்கிரமிக்க கோத்தா ஆரம்பித்தார்.

**சொந்த நாட்டு மக்களை சொந்த நாட்டில் அவர்களது வாழ்விடங்களில் இனவழிப்புச் செய்த கோத்தா பாதுங்குகுழிகளில்கூட பதுங்கி உயிர் காக்க முடியாதளவுக்கு கொடூரமான கொலைக்களமாக முள்ளிவாய்க்கால் யுத்தத்தினை 2009 இல் மேற்கொண்டார்.இன்று சொந்த நாட்டில் அதுவும் சிங்களவர் செறிந்து வாழும் தென்னிலங்கையில் அவரது வீட்டில் வாழமுடியாமல் நாடு விட்டு நாடாக பதுங்கி ஒளித்து கோத்தா வாழும் நிலை ஏற்பட்டுள்ளது. இலங்கையில் வாழ முடியாமல் மாலை தீவுக்குச் சென்றார். மாலை தீவு அரசாங்கமும் கோத்தாவைக் கலைத்து விட்டது.**

தமிழ்ப் பிரதேசங்களை சிங்களக் குடியேற்றதினால்,அபிவிருத்தி என்ற போர்வையில் ஆக்கிரமிக்கப் புறப்பட்டார். கொவிற்றினால் மரணமடைந்த முஸ்லிம் மக்களின் சடலங்களை அவர்களது மதமார்க்கத்திற்கு எதிராக எரிக்க முற்பட்டார்.சிவில் நிருவாகத்தினை இராணுவ மயமாக்க முற்பட்டர்.இந்து, இஸ்லாம்,கிறிஸ்தவ விவகார அமைச்சுகளைக் காணாமல் ஆக்கினார்.தேசிய கீதத்தினை சிங்களத்தில் மட்டுமே பாடவேண்டும் என்று ஆணையிட்டார்.மறைந்த தமிழ் உறவுகளை பகிரங்கமான இடங்களில் நினைவு கூரத் தடைவிதித்தார். பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை மீளவும் உயிர்ப்பித்து தமிழ் இளைஞர்களை மிரட்டும் பாணியில் சிறைகளில் அடைத்தார்.20ஆவது திருத்தத்தினைக் யாப்பில் புகுத்தி தன்னை ஒரு சர்வாதிகாரி போல் நிலைப்படுத்தினார்.சட்டவிரோத செயற்பாட்டுக்காக நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட ஞானசார தேரரின் தலைமையில்' ஒரே சட்டம் ஒரே நாடு' ஆணைக்குழுவை அமைத்தார்.தமிழர் பிரச்சினைகளைப்பற்றிப் பேசுவதையே உதாசீனப்படுத்தினார்.வடக்கை மீண்டும் இராணுவ மயப்படுத்தினார். கிழக்கில் நிருவாகத்திறனற்ற பாரபட்சமான ஆளுனர் ஒருவரை நியமித்துத் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை ஏற்படுத்தினார். இப்படியெல்லாம் தமிழருக்கு எதிரான அடாவடிகளை மேற்கொண்டு தான் சார்ந்த இனவாதிகளைக் குளிரச் செய்யலாம் என்று இனவாத வித்தைகளைக் காட்டினார்.

மேலும் சிங்கள பௌத்தர்கள் சார்பாகவும்,சிறுபான்மை மக்களை ஒடுக்கக் கூடியதாகவும் மோசமான அரசியல் யாப்பு ஒன்றினையும் மூன்றில் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்ற முற்பட்டார் கோத்தா. இப்படியெல்லாம் வினைகளை விதைத்த கோத்தா இனவாத ஆட்டங்களை அரசியல் சதுரங்கத்தில் ஆடும்போது,தம்மைத் தமிழர்களின் பாதுகாவலராக மார்தட்டும் சுயநலத் தமிழ்ப் பிரதிநிதிகள் பெட்டிப்பாம்புகளாக பாராளுமன்றத்தில் தலையசைத்துக் கையுயர்த்தி வந்தனர்.அதற்கான சலுகைகளை அனுபவித்தனர்.எடுபிடித்தமிழர்களுக்கு சலுக்ககளைக் கொடுத்து தமிழர்களின் உரிமைகளைப் பறிக்கும் வஞ்சகப்பொறிமுறை இதுவாகும்.கொந்துறாத்து,கொமிசன்,கையூட்டு,மண்வியாபாரம்,கல்குவாரி என்று குறுக்கு வழிகளில் தமது பணப்பைகளை எடுபிடிகள் நிரப்பிக் கொண்டனர்.

இப்படிச் செயற்பட்ட கோத்தாவின் அறிவீனத்தாலும் அடவாடியாலும் அமுல்படுத்திய நாணயக் கொள்கை,முதலீட்டுக் கொள்கை,விவசாயக்கொள்கை,நிதிக் கொள்கை,வரிக்கொள்கை என்பன நாட்டை வறுமை நிலைக்குத் தள்ளியது. டொலரின் கையிருப்பு பூச்சியமானது.கடன்படுவதே பொருளாதாரக் கொள்கை என்பதாகக் கோத்தாவின் பொருளியல் இலக்கு மாறியது. கடன்களை இறுப்பதில் நம்பிக்கையற்ற நாடாக இலங்கை உலகினால் கணிக்கப்பட்டது. நாட்டில் வரலாற்றில் இல்லாதவாறு பணவீக்கம் 54 வீதமாக உயர்ந்தது. அந்தப் பணவீக்கம் எதிர்காலத்தில் 70 வீதமாக உயரும் என்றும் மத்தி



**ஜி.ஸ்ரீநேசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், மட்டக்களப்பு**

யவங்கி ஆளுனர் நந்தலால் வீரசிங்கவினால் எதிர்வு கூறப்பட்டது.ரூபாவின் பெறுமதி பாரிய வீழ்ச்சி கண்டது. டொலரோடு ஒப்பிடுகையில் 180 ரூபாவாக க்கணிக்கப்பட்ட ரூபாவின் பெறுமதி 365 ரூபாய் வரை இரட்டிப்பானது - டொலர் இருப்பு வறிதாகியது. பொருளாதார வளர்ச்சி மறை ஆறு கணியத்தினை நோக்கிச் சென்றது. ஊழல் மோசடிகள் திருட்டுகள் கையூட்டுகள் தலைவிரித்தாடியது. அபரிமிதமான பொருட்களின் விலையேற்றம்,பொருட் தட்டுப்பாடு. எரிபொருள் விலையேற்றம்,அதன் தட்டுப்பாடு,மின்வெட்டு,தொழில் அற்றதன்மை மக்களை வாட்டி வதைத்தது. எரிபொருள், எரிவாயுவுக்காக மக்கள் வரிசை வரிசையாகப் பல நாட்கள் காத்திருந்தும் கிடைக்காத நிலை ஏற்பட்டது. வரிசை மரணங்கள் 17களுக்கு மேலாக உயர்ந்தது. உலக நாடுகளின் பணவீக்க வரிசையில் இலங்கை 2 ஆவது இடத்தைப் பிடித்தது. மின்சாரத்துண்டிப்பால் இருள் வாழ்க்கை,பொருளாதார வறுமை மக்களைப் புரட்சியாளர்களாக மாற்றியது.கோட்டா கோகமா,மைனா கோம,நோ டீல் கம போராட்டத்தினை மக்கள் உணர்வோடு மேற்கொண்டனர்.கோத்தாவின் அமைச்சர்கள் இராஜினாமா,மகிந்த இராஜினாமா,கோத்தா இராஜினாமா என்று பதவி விலகல்கள் நீடித்தன.

சொந்த நாட்டு மக்களை சொந்த நாட்டில் அவர்களது வாழ்விடங்களில் இனவழிப்புச் செய்த கோத்தா பாதுங்குகுழிகளில்கூட பதுங்கி உயிர் காக்க முடியாதளவுக்கு கொடூரமான கொலைக்களமாக முள்ளிவாய்க்கால் யுத்தத்தினை 2009 இல் மேற்கொண்டார்.இன்று சொந்த நாட்டில் அதுவும் சிங்களவர் செறிந்து வாழும் தென்னிலங்கையில் அவரது வீட்டில் வாழமுடியாமல் நாடு விட்டு நாடாக பதுங்கி ஒளித்து கோத்தா வாழும் நிலை ஏற்பட்டுள்ளது.இலங்கையில் வாழ முடியாமல் மாலை தீவுக்குச் சென்றார். மாலை தீவு அரசாங்கமும் கோத்தாவைக் கலைத்து விட்டது. தற்போது சிங்கப்பூரில் உள்ள கோத்தாவை 15 நாட்களில் வெளியேறுமாறு சிங்கப்பூர் அமைச்சர் ஒருவர் நேரடியாகச்சென்று கோத்தாவிடம் கூறியுள்ளார்.

எந்த நாட்டுக்குச் சென்றாலும் கோத்தா இழைத்த பாவங்கள் அவரைத் துரத்திக் கொண்டே இருக்கின்றது.யுத்தத்தின் போது இழைத்த பாரிய மனித உரிமைமீறல்கள்,ஆட்சிமாற்றத்திற்கான உயிர்த்த ஞாயிறுத்தாக்குதல் (ஆயரின் சந்தேகம்),பொருளாதாரத்தினைக் குட்டிச்சுவர் ஆக்கியமை, விவசாயத்தினை நாசமாக்கியமை, இனவிரிசலை ஏற்படுத்தியமை, கலாசார அழிப்பு அபகரிப்பு,மறைந்த உறவுகளை நினைவுகூரத்தடை,நினைவுச்சின்னங்களின் அழிப்பு,பட்டினி,வரிசை வாழ்க்கை என்று மக்களுக்குப் பல்வேறு அநியாயங்களை கோத்தாவும் அவரது சகாக்களும் செய்துள்ளனர். இவ்வாறான பாவத்தின் வினைகளை கோத்தா குழுமத்தினர் அதிகாரம் எனகின்ற கவசம் கழற்றப்பட்ட நிலையில் சுமக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.இந்தியா,அமெரிக்கா போன்ற நாடுகள் தமது நாடுகளுக்கு அனுப்பப்பட்ட கோத்தாவின் தஞ்சக்கோரிக்கையை மறுத்துவிட்டன.

இஸ்லாமிய நாடுகள் மேலைத்தேயநாடுகள்,ஆசியநாடுகள் என்று எந்த நாட்டுக்கும் செல்ல முடியாத வேண்டத்தகாதவராக கோத்தாவின் தரம் இறக்கப்பட்டுள்ளது.மாலை தீவில் ஒரு நாள் தங்குவதற்கே 18 இலட்சம் ரூபாய்களை செலவு செய்து தன்னைப் பாதுகாக்க வேண்டிய நிலையில் கோத்தா காணப்படுகின்றார்.காணாமல் ஆக்ககப்பட்ட உறவுகளின் கண்ணீரின் வலியானது கோத்தாவைத் தாக்க ஆரம்பித்துள்ளது.கடைசியில் முன்னாள் ஜனாதிபதி என்ற சிறப்புரிமையிலாவது சொந்த நாட்டில் வாழ்ந்துவிடலாம் என்ற முடிவுக்கு கோத்தா வந்துவிட்டதாக அறிய முடிகின்றது. ஆடிய ஆட்டம் என்ன? கூடிய கூட்டம் என்ன? தேடிய தேட்டம் என்ன? இறுதியில் அரை ஆட்சிக்காலப்பகுதியில் ஓடிய ஓட்டம் என்ன? என்ற கேள்விகளுக்குப் பதில்கள் தர வேண்டியவராகக் கோத்தா இன்று உள்ளார். அதிமேதகு அடைமொழியும் போய் திருடன் பைத்தியன் என்று சொந்த இன சிங்கள மக்களே இகழும்நிலை ஏற்பட்டுள்ளது.பதவிகள் அந்தஸ்துகள்,அதிகாரங்கள் தற்காலிகமாக வரும்போது கண்ணியமாகவும் கௌரவமாகவும் பொறுப்புணர்வோடும் ஒவ்வொருவரும் நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு கோத்தா உட்பட ராஜபக்சக்களின் வரலாறு ஒரு படிப்பினையாக அமையப்போகின்றது.மக்களை மறந்த அடிவருடிகள் ஆமாம் சாமிகளும இதனைப் புரிந்துகொள்ளவேண்டும்.சலுகைவாசிகள் தலையில் தூக்கிவைத்த கோத்தாவுக்கே இந்த நிலை என்றால்,மக்களை விற்றாவது அரசியல்பிழைப்பு நாடாத்தச்சென்ற அந்தத் தமிழ் பிரகிருதிகளின் நிலை என்னவாகும் என்பதை மக்கள் அறிவார்கள்.ஆடாதே ஆடாதே அரசியல் சூதாட்டம் ஆடாதே,தேடாதே தேடாதே கொள்ளையிட்டுத்தேடாதே.

# சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 75 ஆவது ஆண்டு மகாசமாதி தினம் இன்று




உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 75வது ஆண்டு மகாசமாதி தினம் (19.07.2022- செவ்வாய்க்கிழமை) இன்றாகும். அடிகளார் 1892.03.27ஆம் திகதி இவ் அவனியில் அவதரித்து 1947.07.19ஆம் திகதி மகா சமாதி அடைந்தார். இன்றுடன் 75வருடங்களாகின்றது. அதாவது அடிகளார் அவதரித்து 130வருடங்களாகின்றன. மகாசமாதியடைந்து 75வருடங்களாகின்றன. ஆக வாழ்ந்த காலம் 55வருடங்கள்.

இந்த 75ஆவது ஆண்டு பவளவிழா அனுஸ்ட்டிப்புத் தொடர் இன்றுடன் ஆரம்பமாகி எதிர்வரும் 2023.07.19 வரை தொடரவிருக்கின்றது.

அடிகளாரின் 75ஆவது ஆண்டு மகாசமாதி நினைவு நிகழ்வுத் தொடர் இன்று(19)அவர் பிறந்த காரைதீவில் அவரது திருவுருவச்சிலை திறத்தலுடன் ஆரம்பமாகின்றது.

காரைதீவில் அவர் பிறந்த இல்லத்தோடு ஒட்டியதாக அவர் நினைவாக எழுப்பப்பட்ட மணிமண்டபத்தை நிருமாணித்த பணிமன்றத்தினர் இந்து கலாசார திணைக்களப்பணிப்பாளர் அருளானந்தம் உமாமகேஸ்வரன் அவர்களின் அனுசரணையோடு காரைதீவு கண்ணகை அம்மன் ஆலய பிரதான வீதி சந்திக்கும் முச்சந்தியில் நிறுவிய மார்பளவிலான திருவுருவச்சிலை இன்று(19) இ.கி.மிசனின் மட்டு. மாநில உதவிமேலாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ அவர்களால் திறந்துவைக்கப்படவிருக்கிறது.

இதுதவிர இந்த 75ஆவது ஆண்டு காலப்பகுதியில் தமிழ்கூறுநல்லுலகெங்கும் பல சிலைகள் நிறுவப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

அவுஸ்திரேலியாவில் வாழும் காரைதீவைச்சேர்ந்த பரோபகாரி உதயசூரியன் நாகமணி குணரெத்தினம் அவர்கள் காரைதீவில் நிறுவுவதற்கென இருபெரும் சிலைகளை தனது சொந்தச்செலவில் அமைத்துக் கொடுத்துள்ளார்.

அவர் மகாசமாதி அடைந்த யூலை 19 தினத்தை கௌரவிக்குமுகமாக இலங்கை அரசாங்கம் அகிலஇலங்கை தமிழ் மொழித்தினபோட்டிகளின் இறுநாள் விழாவை நடாத்திவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

மட்டக்களப்பு கல்லடியில் அமைந்துள்ள மகாசமாதி கல்லறையில் அவர் யாத்த பாடல் இன்றும் மிளர்ந்து கொண்டிருக்கிறது.

இன்றைய நன்நாளில் அப்பாடலின் விளக்கத்தை இன்றைய சந்ததிக்கு எடுத்தியம்புதல் பொருத்தமாகும்.

'வெள்ளை நிற மலிகையோ -விபுலானந்தர்
வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது'

வள்ளலாம் இறைவன் திருவடிக்கு ஏற்ற மலரெது? வெள்ளை நிற மல்லிகையா? வேறெந்த பெரிய மலரா?

உத்தமனாம் இறைவன் திருவடிக்கு வேண்டிய மலர் வெள்ளை நிறப் பூவுமில்லை வேறெந்த மலருமில்லை. உள்ளமாம் தாமரையே அவன் வேண்டுவது.

'காப்பவிழ்ந்த தாமரையோ கழுநீர் மலர்த்தொடையோ
மாப்பிள்ளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ
காபவிழ்ந்த மலருமல்ல கழுநீர்த் தொடையுமல்ல
கூப்பியகைக் காந்தளடி கோமகனார் வேண்டுவது.'

மலர்ந்த தாமரையா? கழுநீர்ப்பூ மாலையா? பெரியவனாம் இறைவனுக்கு ஏற்ற மலரெது?

மலர்ந்த மலருமில்லை. கழுநீர்ப்பூ மாலையும் இல்லை. அன்பினால் வணங்கும் கூப்பிய கைகளாம் காந்தள் மலரே அரசனாம் இறைவன் வேண்டுவது.

'பாட்டளிசேர் பொற்கொன்றையோ பாரிலில்லாக் கற்பகமோ
வாட்ட முறாதவற்கு வாய்த்த மலரெதுவோ
பாட்டளிசேர் கொன்றையல்ல பாரிலில்லாப் பூவுமல்ல
நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது.'

பாடிக் கொண்டு வரும் வண்டுகள் விரும்பும் பொன்னிறக் கொன்றை மலரா? உலகத்தில் இல்லாமல் தேவர் உலகில் இருக்கும் கற்பக மலரா? வேண்டுதல் வேண்டாமை இல்லாததால் எந்த வித வருத்தமும் இல்லாத இறைவனுக்கு ஏற்ற மலரெது?

பாடும் வண்டுகள் விரும்பும் கொன்றையில்லை. பாரில் இல்லாத பூவுமில்லை. அவன் அருளை எண்ணிக் கண்ணீர் விடும் விழியெனும் நெய்தல் பூ தான் தலைவனாம் இறைவன் வேண்டுவது.


அடிகளார் ஆற்றிய அளப்பரிய பணிகளை இன்றும் தமிழ்கூறு நல்லுலகம் நினைவில் கொண்டிருக்கிறது.-

இயல்இசைநாடகம் ஆகிய முத்தமிழிலும் சிறந்து விளங்கிய காரணத்தால் முத்தமிழ் வித்தகர் எனப் போற்றப்பட்டவர் சுவாமி விபுலாநந்தர்.

அவர் பல்துறை சார்ந்த பேரறிஞர். ஆசிரியராக, பண்டிதராக, விஞ்ஞானப் பட்டதாரியாக, பாடசாலைகளின் முகாமையாளராக, பல்கலைக்கழகங்களில் தமிழ்த்துறைப் பேராசிரியராக, அறிஞராக, ஆராய்ச்சியாளராக, மொழிபெயர்ப்பாளராக, முத்தமிழ் வித்தகராக விளங்கியவர் விபுலானந்தர்.சமூகத் துறவியாக வாழ்ந்து செய்த தொண்டுகளும் தமிழுக்காற்றிய சேவைகளும் அவரை என்றும் நினைவுகூரச் செய்வனவாகும்.

தமிழ் கூறும் நல்லுலகம் போற்றுகின்ற 'யாழ்நூல்' என்னும் பொக்கிசத்தைத் தரணிக்குத் தந்த சுவாமி விபுலானந்தர் கிழக்கிலங்கையின் காரைதீவில் 1892.-03-.27 அன்று சாமித்தம்பி-கண்ணம்மை தம்பதியருக்கு மகனாக 'தம்பிப்பிள்ளை' என்ற நாமத்தோடு அவதரித்தார். சிறுவயதில் நோய்வாய்ப்படவே கதிர்காம முருகனின் பெயராகிய 'மயில்வாகனன்' எனும் பெயரை பெற்றோர் சூட்டினர்.

பாரதியாரின் முற்போக்குக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாதவர்கள் அன்று பாரதியை அவமதித்தார்கள். அவரின் பாடல்களை வெறுத்தார்கள். அவற்றை இலக்கியமென்று ஏற்க மறுத்தார்கள். மக்களுக்குத் தெரியவராதபடி மறைத்தார்கள். பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் புறக்கணித்தார்கள்.இத்தனை பேருக்கும் எதிராக பாரதியை மகாகவியாக படித்த மக்களிடையே



உலவ விட்டவர் விபுலானந்த அடிகளார் என்பது பலருக்குத் தெரியாத விடயம்.

இன்று பாரதியாரைப் பற்றி ஆயிரக்கணக்கான நூல்கள் வந்து விட்டன. இலட்சக்கணக்கான கட்டுரைகள் எழுதப்பட்டு விட்டன.

விபுலானந்தர் தமிழ்நாட்டில் கால் ஊன்றாமல் இருந்திருந்தால் மகாகவி பாரதியாரை உலகம் காணாது இருந்திருக்கும். பாரதியின் தமிழ் வீணாக மடிந்திருக்கும்.சுவாமி விபுலானந்தர் பல்கலைக்கழக மட்டத்திற்குப் பாரதியைக் கொண்டு சென்றதால் பாரதியின் திறமையை யாராலும் அழிக்க முடியவில்லை. விபுலானந்த அடிகளின் தமிழ்ப் பணிகளிலே இமயமென உயர்ந்து நிற்பவற்றிலே அவர் பாரதியாரின் பாடல்களுக்கு அங்கீகாரத்தை ஏற்படுத்திக் கொடுத்தமையும் ஒன்றாகும்.

சங்க இலக்கியங்களுக்கு நிகராக எண்ணப்படுகின்ற 'கங்கையில் விடுத்த ஓலை' என்னும் அடிகளாரின் கவிதை மலரும், மற்றைய இனிமையான கவிதைகளும் எண்ணற்ற கட்டுரைகளும் இயற்றமிழுக்கு அவர் ஆற்றிய பணியினை இயம்பிக் கொண்டிருக்கின்றன.

சுவாமி விபுலானந்த அடிகள் மக்கள் எல்லோரையும் சமமாக மதித்தார்.கல்வி எல்லோருக்கும் பொதுவானது என்று நினைத்தார். தீண்டத்தகாதவர் என்று ஒதுக்கி வைக்கப்பட்ட மக்களுக்கும் கல்வி கிடைப்பதற்கு வழிசமைத்தார்.

ஆங்கிலக் கல்வியினை இவர் முதலில் கல்முனையிலுள்ள மெதடிஸ்ற் கல்லூரியிலும் பின்னர் மட்டக்களப்பிலுள்ள மைக்கேல் கல்லூரியிலும் கற்றார். இவர் 16வது வயதிலேயே கேம்பிரிட்ஜ் பரீட்சையில் சித்தியெய்தினார். 1916இல் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் தேர்விலும் வெற்றி பெற்று 'இலங்கையின் முதலாவது மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர்' என்னும் பெருமையையும் பெற்றார். 1919இல் லண்டன் பல்கலைக்கழகம் நடத்திய பி.எஸ்.சி தேர்விலும் சித்தியடைந்தார்.

கொழும்பு அரசினர் தொழிநுட்பக் கல்லூரியில் உதவி விரிவுரையாளராக பணியாற்றினார். மயில்வாகனனாரின் விரிவுரைகள் மாணவர் மத்தியில் பெரும் சிறப்பைத் தேடிக் கொடுத்தன. அதனால் 1917ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரிக்கு விஞ்ஞான ஆசிரியராக விரும்பி அழைத்தனர். அதனை பெருவிருப்புடன் ஏற்றுக் கொண்டார்.

மயில்வாகனனாரின் மொழிப்புலமையையும் ஆற்றலையும் அறிந்த மானிப்பாய் இந்துக்கல்லூரி முகாமையாளரும் திருப்புகழ்சிவப்பிரகாசம்,சிவஞான சித்தியார் என்பவற்றுக்கு உரை எழுதியவருமான வழக்கறிஞர் திருவிளங்கத்தாரின் வேண்டுகோளுக்கிணங்கி மானிப்பாய் இந்துக்கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்றுக் கொண்டார். திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் 1925ஆம் ஆண்டிலிருந்து முகாமையாளராகக் கடமையாற்றிய சுவாமி விபுலானந்தர் 1928 இல் அதிபர் பதவியையும் ஏற்றுக் கொண்டார்.

மயில்வாகனனுக்கு சென்னையில் மயிலாப்பூர் மடத்தில் சுவாமி சித்தானந்தரினால் பிரபோத சைதன்ய பிரிவில் பிரமச்சரிய தீட்சையும் சந்நியாச தீட்சையும் வழங்கப்பட்டன. 1924இல் சென்னை சென்ற மயில்வாகனனார் இராமகிருஷ்ண சங்கத்தில் சேர்ந்து 'பிரபோத சைதன்யர்' என்னும் பெயர் பெற்றார். அதே ஆண்டு சித்திரைப் பௌர்ணமியில் துறவறம் மேற்கொண்டு சுவாமி சிவானந்தரால் 'சுவாமி விபுலானந்தர்' என்னும் நாமம் சூட்டப் பெற்றார். கல்லடி உப்போடையில் விபுலானந்தர் தாம் அமைத்த பாடசாலைக்கு சிவானந்த வித்தியாலயம் என நாமம் சூட்டியது தமது குருவின் ஞாபகார்த்தமாகவே.

'கலை அறிவியல் மெய்ஞானம் மூன்றும் ஒருங்கிணையும் கல்வியே முழுமையான கல்வி' என்பது அடிகளாரின் கருத்தாகும்.


1925இல் இலங்கை திரும்பிய அடிகளார் கல்லடி உப்போடையில் சிவானந்தா வித்தியாலயமும் காரைதீவில் சாரதா மகளிர் கல்லூரியும் மற்றும் ஆதரவற்றோர் மாணவர்இமாணவியர் இல்லங்களும் நிறுவி அளப்பெரிய கல்வித் தொண்டு செய்தார். பின்பு யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தையும் திருகோணமலை இந்துக் கல்லூரியையும் இராமகிருஷ்ண சங்கத்தோடு இணைத்ததோடு நில்லாது மலையகத்திலும் பாடசாலைகள் அமைத்து சகலருக்கும் சிறந்த கல்வித் தொண்டாற்றினார். மேலும் இராமகிருஷ்ணமிஷன் மேற்கொள்ளும் கல்விப் பணிகளை ஒருங்கமைத்தார்.

1931இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதல் தமிழ்ப் பேராசிரியராகவும்,1943இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியராகவும் பணி புரிந்தார். அத்தனை சிறப்போடு மொழியியல் விஞ்ஞானியாகஇஅறிவியல் கலைஞராக,ஆத்மீக ஞானியா,ஆற்றல் மிகு பேராசிரியரா,இயற்றமிழ் வல்லுனரா,இசைத்தமிழ் ஆராய்ச்சியாளராக பல பணிகள் புரிந்தார். 1943ஆம் ஆண்டில் இலங்கையில் பல்கலைக்கழகம் இயங்கத் தொடங்கிய போது தமிழ்த் துறையின் முதலாவது பேராசிரியராக பலரின் வேண்டுகோளிற்கிணங்க பணிபுரிய இணங்கினார். தமிழ் ஆய்வுத் துறையில் எவ்வழியில் செல்ல வேண்டுமென்ற திட்டங்களை சுவாமி விபுலானந்தரே வகுத்தார்.

யாழ்நூல், மதங்கசூளாமணி, கணேச தோத்திரப் பஞ்சகம், குமர வேணவ மணிமாலை, நடராஜ வடிவம் என்பன அடிகளாரின் பிரதான நூல்களாகக் காணப்படுகின்றன. மேலும் இலக்கியம், இசை,சமயம, மொழியியல், கல்வி, அறிவியல் சம்பந்தமாக எண்ணிறைந்த கட்டுரைகளையும் நூல்களையும் வெளியிட்டு தமிழுக்கும் கல்விக்கும் தொண்டாற்றியுள்ளார். மேலும் விவேகானந்த ஞானதீபம், சம்பாசனைகள் (1924, கருமயோகம் (1934, ஞான யோகம் (1934 நம்மவர் நாட்டு ஞான வாழ்க்கை (1941, விவேகானந்தரின் பிரசங்கம் (1934, அறிவியல் சம்பந்தமான எந்திரவியல் (1933, கலைச்சொல்லாக்க மாநாட்டுத் தலைமையுரை (1936)இ கலைச் சொற்கள் வேதிநூல் (1938, மின்சார சாத்தி வரலாறு,விஞ்ஞான தீபம் (1922, விஞ்ஞான தீபம்-மொழிபெயர்ப்பு முறை (1922) போன்ற நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

அக்காலத்தில் தமிழகத்தில் எண்ணற்ற தமிழறிஞர்கள் இருந்தும் சங்கத் தமிழில் சிறந்தவர்கள் தமிழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சாமிநாதையர் மற்றும் இலங்கையைச் சேர்ந்த விபுலானந்தர் மட்டுமே என்னும் புகழாரம் அடிகளாருக்கு மட்டுமல்ல இலங்கைத் தமிழருக்கும் பெருமை தேடித் தந்தது.

அப்படி ஈழம் முதல் பணி இமயம்வரை கொடி கட்டிய இசைத்தமிழனான அடிகளாரின் 75வது மகாசமாதி நினைவு ஆண்டுத்தொடர் உலகின் எட்டுத்திக்கிலும் புகழ்பரப்ப பரவலாக அனுஸ்ட்டிக்கப்படவேண்டும் என்பதே எமது வேணவா.



Swami Vipulananda
சுவாமி விபுலானந்தர்
(1892 - 1947)
ஸ்தாபகர்: ராமகிருஷ்ண மிஷன், இலங்கை
Founder:Ramakrishna Mission, Sri Lanka



**விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா.**
**முன்னாள் தலைவர் சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றம். காரைதீவு**



